# சென்றல் டிப்போசிற்றறி சிஸ்ரம் (பிறைவேட்) லிமிட்டெட்

**இந்த விதிகளின் தமிழ் மொழிபெயர்ப்புக்கும் ஆங்கில பதிப்புக்குமிடையில் ஏதேனும் பொருந்தாமை காணப்படுமாயின், விதிகளின் ஆங்கில பதிப்பே வலுவுடையதாகும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.**

**(2018 ஜனவரி 24 ஆம் திகதி வரையான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது)**

# விதிகள்

# 2014 ஜுலை

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| பிரிவு 1- | வரைவிலக்கணங்கள் | 04 |
| பிரிவு 2- | பங்குபற்றுநர்கள் | 10 |
| பிரிவு 3- | பிணையங்கள் | 13 |
| பிரிவு 4- | வாடிக்கையாளர் கணக்குகள் | 14 |
| பிரிவு 5- | கொள்வனவு மற்றும் விற்பனைகளைப் பதிவுசெய்தல் | 22 |
| பிரிவு 6- | நிதிகளைக் கொடுத்துத் தீர்த்தலுக்கான வசதிப்பாடு | 25 |
| பிரிவு 7- | பிணையங்களின் உருப்பொருள் நீக்கம் (பிணையங்களின் வைப்பு) | 30 |
| பிரிவு 8- | பிணையங்களின் உருப்பொருள் ஆக்கம் (பிணையங்களின் மீளப்பெறல்) | 34 |
| பிரிவு 9- | CDS இல் பிணையங்களைக் கைமாற்றல் | 35 |
| பிரிவு 10- | உரித்துடைமைகள் | 38 |
| பிரிவு 11- | CDS கணக்குக் கூற்றுக்கள் | 42 |
| பிரிவு 12- | பங்குபற்றுநர்களுக்கு இடையேயான தவறுகையை ஆளுகின்ற விதிகள் | 47 |
| பிரிவு 13- | பொது | 50 |
| பிரிவு 14- | பங்குபற்றுநரின் நிதிப் பொறுப்பும், தொழிற்பாட்டு ஆற்றலும் | 53 |
| பிரிவு 15- | சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான மட்டுப்பாடுகள் | 54 |
| பிரிவு 16- | ஒழுக்காற்று வழக்கு நடவடிக்கைகள் | 55 |
| பிரிவு 17- | திருத்தப்பட்டவாறான SEC சட்டத்தின் 23ஆம் பிரிவின் நியதிகளின்படி SEC யிடமிருந்து CSE க்குக் கிடைக்கும் | 56 |

பிரிவு 18- கடன் பிணையங்கள் தொடர்பான விதிகள் 59

பிரிவு 19- கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் தன்னியக்கமாக்கப்பட்ட வியாபார முறைமையின்மீது எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதிகளாக நிறைவேற்றப்பட்ட வியாபாரங்களைத் தீர்வுசெய்வதற்கும் தீர்த்துவைப்பதற்குமான மேலதிக விதிகள் 69

# அறிமுகம்

## சென்றல் டிப்போசிற்றரி சிஸ்ரம்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் CDS

சென்றல் டிப்போசிற்றரி சிஸ்ரம்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் (CDS), கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (CSE) ஒரு முழுமையாக சொந்தமாக்கப்பட்ட துணைநிலைக் கம்பனியாகும். CSE இன் மீது வியாபாரம் செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பிலான வைப்பகமொன்றாகச் செயலாற்றும் நோக்கத்திற்காகவும் அதற்கு மேலதிகமாக அவ்வாறு வியாபாரம் செய்யபட்ட பிணையங்களின் கொடுத்துத் தீர்த்தலுக்கு வசதியளிப்பதற்கும், 1982ஆன் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றாக 1991 ஆகஸ்ட் 30ஆம் தேதியன்று கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

பங்குபற்றுநர்களுக்கு CDS இனால் அளிக்கப்பட்ட வைப்பாகப் பணிகள் தொடர்பான விதிகள் இவ் விதிகளில் தரப்படுகின்றது.

CDS இன் பங்குபற்றுநர்கள் யாவரும் இவ்விதிகளுடன் இணங்குதல் வேண்டும். இவ்விதியின் ஏதேனும் மீறுகை பங்குபற்றுநர் ஒருவருக்கும் CDS இற்கும் இடையிலான ஒப்பந்த மீறுகை ஒன்றாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். CDS விதிகள், நியதிச் சட்டக் கடப்பாடுகளிற்கு மேலதிகமானதாகவும் குறைநிரப்பியாகவும் இருக்கக்கூடியதான கடப்பாடுகளை உருவாக்குகின்றன.

# பிரிவு 1

## பொருள்கோடல்

### 1. வரைவிலக்கணங்கள்

பின்வரும் சொற்றொடர்கள் இதன்கண் பயன்படுத்தப்பட்டபோது, சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி பின்வரும் கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கணக்கு வைத்திருப்பவர்**

கணக்கு வைத்திருப்பவர் என்பது CDSஇல் வாடிக்கையாளர் கணக்கு ஒன்றை வைத்திருக்கின்ற எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

**மீதி அற்றது**

மீதி அற்றது என்பது எந்த வாடிக்கையாளர் கணக்கொன்றில் வியாபாரம் நிறைவேற்றப்படுகின்றதோ அந்த வாடிக்கையாளர் கணக்கொன்றில் வைத்திருக்கப்படும் பிணையங்களின் முதலீட்டு வகை எனப் பொருள்படும்.

**பணிப்பாளர்கள் சபை**

பணிப்பாளர்கள் சபை CDSஇன் பணிப்பாளர்கள் சபை எனப்பொருள்படும்

**CDS**

CDS என்பது சென்றல் டிப்போசிற்றரி சிஸ்ரம் (பிறைவேட்) லிமிட்டெட் எனப் பொருள்படும்.

**வாடிக்கையாளர் கணக்கு**

வாடிக்கையாளர் கணக்கு என்பது இவ்விதிகளின் 4ஆம் பிரிவிற்கிணங்க CDS இல் ஆளொருவர் சார்பில் திறக்கப்படும் கணக்கொன்று எனப்பொருள்படும்.

**CSE**

CSE என்பது கொழும்பு பங்குப்பரிவர்த்தனை எனப் பொருள்படும்.

**கம்பெனிச் செயலாளர்**

கம்பெனிச் செயலாளர் என்பது 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் முறையாக நியமிக்கப்படும் நிரற்படுத்தப்பட்ட உருவகம் ஒன்றின் கம்பனிச் செயலாளர் எனப் பொருள்படும்.

**நம்பிக்கைப்பொறுப்பு வங்கி/நம்பிக்கைப்பொறுப்பு பரிவர்த்தனையாளர்**

நம்பிக்கைப்பொறுப்பு வங்கி/ நம்பிக்கைப்பொறுப்பு பங்குபற்றுநர் என்பது நம்பிக்கைப்பொறுப்புசார் சேவைகளை வழங்கும் 1988ஆம் ஆண்டின் வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் (திருத்தப்பட்டவாறான) உரிமம் பெற்ற வங்கி ஒன்று எனப் பொருள்படும்.

**நம்பிக்கைப்பொறுப்பு வியாபாரம்**

CDS இலுள்ள நம்பிக்கைப்பொறுப்பு வங்கி ஒன்றின் ஊடாக பதிவு செய்யப்பட்ட கணக்கு வைத்திருப்பவரினால் நிறைவேற்றப்படும் வியாபாரம் ஒன்று எனப் பொருள்படும்.

**உருப்பொருள் நீக்கம்**

உருப்பொருள் நீக்கம் என்பது எந்தச் செய்முறை மூலம் கணக்கு வைத்திருப்பவர்கள் CDS இல் கட்டுப்பண பத்திர வடிவத்திலிருந்து இலத்திரனியல் வடிவத்தில் வைத்திருக்கப்படும் பிணையங்களிற்கான உரித்தை மாற்ற முடியுமோ அந்தச் செய்முறை எனப் பொருள்படும்.

**முடக்கல் மீதி**

எந்த ஆரம்பப் பகிரங்க பங்கு வழங்கலின் மீது இயைபான பிணையத்தை வழங்குநரின் அறிவுறுத்தல்கள் மீது வியாபாரம், மட்டுப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆரம்ப பகிரங்க பங்கு வழங்கலின் ஊடாக வாடிக்கையாளர் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்ட பிணையங்களின் முதலீட்டுவகை எனப் பொருள்படும்.

**சர்வதேச பிணையத்தை இனங்காண்பதற்கான இலக்கம் (ISIN)**

சர்வதேச நியமங்கள் ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட பிணையங்களை இனங்காண்பதற்கான நியமங்களிற்கு இணங்க CSE இனால் குறித்தளிக்கப்பட்ட தனித்துவமான இலக்கம் எனப் பொருள்படும்.

**நிரற்படுத்தப்பட்ட உருவகம்**

எந்த உருவகம் ஒன்று CSE இன் மீது நிரற்படுத்தப்பட்ட அதனது பிணையங்களைக் கொண்டுள்ளதோ அந்த உருவகம் ஒன்று எனப் பொருள்படும்.

**நிரற்படுத்தப்பட்ட பிணையம்**

எந்தவொரு பிணையம் CSE மீது நிரற்படுத்தப்பட்டிருக்கின்றதோ அந்தவொரு பிணையம் எனப் பொருள்படும்.

**முடக்கப்பட்ட மீதி**

எந்த வாடிக்கையாளர் கணக்கொன்றின்மீது வியாபாரமானது கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுதலின் பேரில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றதோ அந்த வாடிக்கையாளர் கணக்கொன்றில் வைத்திருக்கப்படுவதும் இவ் விதிகளின் 7.1 மற்றும் 8.1 விதிகளில் தரப்பட்ட நிகழ்வுகளில் தவிர பங்குபற்றுநருக்கு காண்பிக்க முடியாதிருக்கின்றதுமான பிணையங்களின் முதலீட்டு வகை எனப் பொருள்படும்.

**சந்தை நாள்**

சந்தை நாள் என்பது எந்த நாளன்று CSE ஆனது வியாபாரத்திற்காக திறக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் நாள் எனப் பொருள்படும்.

**உறுப்பினர்**

உறுப்பினர் என்பது CSE இன் அமைப்பு அகவிதியின் நியதிகளின்படி ஒன்றில் CSE இன் உறுப்பினர் ஒருவராக அல்லது வியாபார உறுப்பினர் ஒருவராக உறுப்புரிமையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர் ஒருவர் எனப் பொருள்படும்.

**தே.அ.அ**

தே.அ.அ என்பது திருத்தப்பட்டவாறான 1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை எனப் பொருள்படும்.

**தே.அ.அ. இலக்கம்**

தே.அ.அ. இலக்கம் என்பது தே.அ.அட்டையில் காணப்படுகின்ற இலக்கம் எனப் பொருள்படும்.

**தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கு**

தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கு என்பது எந்த வாடிக்கையாளர் கணக்கொன்றில் CDS ஆனது அதனது வியாபார கையாள்கையை இடைநிறுத்தியுள்ளதோ அத்தகைய வாடிக்கையாளர் கணக்கொன்றில் நிறைவேற்றப்பட்ட கடைசிக் கொடுக்கல் வாங்கல் தேதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகள் காலப்பகுதி ஒன்றிற்கு கொடுக்கல் வாங்கல் எதுவுமற்ற வாடிக்கையாளர் கணக்கு எனப் பொருள்படும்.

**பங்குபற்றுநர்**

பங்குபற்றுநர் என்பது பங்குபற்றுநர் ஒருவராக இவ்விதிகளின் 2ஆம் பிரிவின் கீழ் CDS இனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஒழுங்கமைப்பு, உருவகம் அல்லது ஆள் எனப் பொருள்படும்.

**உருப்பொருள் ஆக்கம்**

உருப்பொருள் ஆக்கம் என்பது CDS இல் இலத்திரனியல் வடிவத்தில் இருப்பதை கட்டுப்பணப் பத்திர வடிவத்திற்கு மாற்றி பிணையங்களிற்கான உரித்தை மாற்றுதல் எனப் பொருள்படும்.

**விதிகள்**

விதிகள் என்பது CDS விதிகள் எனப் பொருள்படும்.

**SEC**

SEC என்பது திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு எனப் பொருள்படும்.

**பிணையங்கள்**

பிணையங்கள் என்பது திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறானதும் தகவுடைய பிணையங்களாக காலத்திற்குக் காலம் CDS இனால் அங்கீகரிக்கப்பட்டவாறானதுமான பிணையங்கள் எனப் பொருள்படும்.

**கொடுத்துத் தீர்த்தல்**

கொடுத்துத் தீர்த்தல் என்பது இவ்விதிகளின் 6ஆம் பிரிவிற்கு இணங்க நிதிகளைக் கொடுத்துத் தீர்த்தல் எனப் பொருள்படும்.

**கொடுத்துத் தீர்த்தல் தவறுகை**

கொடுத்துத் தீர்த்தல் தவறுகை என்பது காலத்திற்குக் காலம் CDS இனால் தீர்மானிக்கப்பட்டவாறான பங்குபற்றுநர்களுக்கு இடையேயான கொடுத்துத் தீர்த்தல் திகதியன்று பங்குபற்றுநர் ஒருவரால் நிதிகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தவறுதல் எனப் பொருள்படும்.

**பங்குமுகவர் பங்குபற்றுநர்**

பங்கு முகவர் பங்குபற்றுநர் என்பது பங்கு முகவர் ஒருவராக செயற்படுவதற்கு SEC இனால் உரிமம் பெற்ற CSE இன் உறுப்பினர் ஒருவர் அல்லது வியாபார உறுப்பினர் ஒருவர் எனப்பொருள்படும்.

**பங்குத் தரகர் பங்குபற்றுநர்**

பங்குத் தரகர் பங்குபற்றுநர் என்பது பங்குத் தரகர் ஒருவராகச் செயற்படுவதற்கு

SEC வினால் உரிமம் பெற்ற CSE இன் உறுப்பினர் ஒருவர் அல்லது வியாபார உறுப்பினர் ஒருவர் எனப் பொருள்படும்.

**வியாபாரம்**

வியாபாரம் என்பது CSE இன் தன்னியக்க வியாபார முறைமை ஊடாக பயனுறுத்தப்பட்ட பிணையங்களின் கொள்வனவு, அல்லது விற்பனை கொடுக்கல் வாங்கல் எனப் பொருள்படும்.

**நிரற்படுத்தப்படாத பிணையம்**

நிரற்படுத்தப்படாத பிணையம் என்பது CSE மீது நிரற்படுத்தபடாமலிருக்கின்ற பிணையங்கள் எனப் பொருள்படும்.

தலைப்புக்கள்

உசாத்துணைக்கு சுலபமாக இருப்பதற்கு மட்டும் வழங்கப்படுகின்றது என்பதுடன் விதிகளின் ஏற்பாடுகளின் பொருள்கோடலை அல்லது அமைப்புருவை பாதிக்காது.

**2. விதிகளின் பொருள்கோடல்**

**இவ்விதிகளின் பொருள்கோடல், முரணாக, வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, மேலே தரப்பட்ட பொருள் கோடலுடன் ஒத்திசைவானதாதல் வேண்டும். ஏதேனும் இருபொருள்மை இருக்கும் பட்சத்தில் CDS இன் பணிப்பாளர்கள் சபை அல்லது அதன் ஏதேனும் குழு அல்லது அவற்றின் நியமித்தவர் (நியமித்தவர்கள்) CDS இன் விதிகளை பொருள்கோடல் செய்வதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும். பணிப்பாளர்கள் சபையின் அல்லது அதன் ஏதேனும் குழு அல்லது அல்லது அவற்றின் நியமித்தவர் (நியமித்தவர்கள்) என்பனவற்றின் பொருள்கோடல்கள் இறுதியானதாதல் வேண்டும். எவ்வாறாயினும் இவை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கான மேன்முறையீட்டை கட்டுப்படுத்துவதாக அமையாது என்பதுடன் அத்தகைய மேன்முறையீடு ஏழு (07) நாட்களினுள் செய்யப்படல் வேண்டும்.**

இவ்விதிகளின் ஏற்பாடுகள் எதற்கும், CDS தொழிற்பாட்டு வழிகாட்டு நெறிகள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு இருக்கும்பட்சத்தில், இவ்விதிகள் மேலோங்குதல் வேண்டும்.

**பிரிவு 02**

**பங்குபற்றுநர்கள்**

CDS இல் கணக்கு வைத்திருப்பவர் தொடர்பான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் CDS பங்குபரிவர்த்தனையாளர் ஒருவர் ஊடாக மட்டும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**2.1 பங்குபற்றுநர் ஒருவராக நியமிப்பதற்கான தகவுடைமை**

பின்வரும் ஆட்கள் பங்குபற்றுநர் ஒருவராக நியமிப்பதற்கு தகவுடையவர்களாக இருக்கின்றார்கள்.

(i) பங்குத் தரகர்

(ii) பங்கு முகவர்

(iii) நம்பிக்கைப்பொறுப்பு வங்கி

(iv) அதனது தனித் தற்றுணிவின்படி பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஆட்கள்/ நிறுவனங்களின் அத்தகைய வேறு வகை

**2.2 பங்குபற்றுநர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பம்**

பங்குபற்றுநர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பம் காலத்திற்குக் காலம் CDS இனால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் CDS இற்கான விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**2.3 பங்குபற்றுநர் அந்தஸ்தை வழங்குதல்**

பங்குபற்றுநர் அந்தஸ்தை வழங்குதல் ஆனது காலத்திற்குக் காலம் CDS இனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பங்குபற்றுநருக்கு அந்தஸ்தை வழங்கும் சந்தர்ப்பத்தில் எழுத்தில் அத்தகைய பங்குபற்றுநருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

### 2.4 தொழிற்பாட்டு வழிகாட்டு நெறிகளும் நடவடிக்கை முறைகளும்

நிருவாக நோக்கங்களுக்காக CDS ஆனது காலத்திற்குக் காலம் பங்குபற்றுநர்களுக்கு கடிதங்கள் மற்றும் சுற்றுநிருபங்கள் போன்ற வடிவத்தில் தொழிற்பாட்டு வழிகாட்டு நெறிகளையும் நடவடிக்கை முறைகளையும் வழங்கலாம்.

### 2.5 பங்குபற்றுநர் கோவை

சுலபமாக இனங்காண்பதற்காக, ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் CDS இனால் பங்குபற்றுநர் குறியீடு ஒன்று குறித்தளிக்கப்பட வேண்டும். அது அத்தகைய பங்குபற்றுநரைக் குறிப்பீடு செய்கின்றபோது பயன்படுத்தப்படல் வேண்டும்.

### 2.6 பங்குப் பரிவர்த்தனையாளர் சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்

ஒவ்வொரு பங்குபற்றுநரும் அத்தகைய பங்குபற்றுநர் சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கபட்டிருக்கின்ற ஆட்களை பிரதான நிறைவேற்று அலுவலரின் கைச்சாத்துடன் CDS இற்கு பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். அத்தகைய நியமத்தவர்கள் CDS உடன் தொடர்புகொள்ள வேண்டிய ஆட்கள் ஆதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பங்குபற்றுநர் சம்பந்தப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் CDS இற்கு அறிவுறுத்துவதற்கு அதிகாரம் கொண்டிருத்தலும் வேண்டும். பங்குபற்றுநர்கள் அத்தகைய அதிகாரம் அளிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான ஏதேனும் மாற்றத்தை அது தொடர்பில் முடிவெடுத்தவுடன் CDS இற்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும் என உறுதிப்படுத்தல் வேண்டும்.

### 2.7 பங்குபற்றுநர்கள் கட்டணம்

பங்குபற்றுநர் ஒருவராக முறைசார்ந்த ரீதியில் சேர்த்துக்கொள்ளப்படுவதன் பின்னர் CDS இனால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான CDS இனால் அளிக்கப்பட்ட சேவைகள் மற்றும் வசதிகள் தொடர்பில் கட்டணங்கள், விதிப்பனவுகளை செலுத்தலும் செலவுகளை மீளளித்தலும் வேண்டும்.

### 2.8 வங்கி உத்தரவாதம்

அ) ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் CDS இற்கென ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான வடிவம் ஒன்றில் வங்கி உத்தரவாதம் ஒன்றையும் இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிரயோகிக்கப்படுவதற்கு CDS இனால்

வைத்திருக்கப்படவேண்டிய அத்தகைய வங்கி உத்தரவாதத்தையும் கொடுத்துதவுவதற்கு பணிப்பாளர் சபையினால் தேவைப்படுத்தப்படலாம் என்பதுடன் ஒவ்வொரு பங்குபற்றுநரால் தேவைப்படுத்தப்படும் வங்கி உத்தரவாதத்தின் தொகை, காலத்திற்குக் காலம் CDS இன் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையொன்றில் CDS இனால் நிர்ணயிக்கப்படல் வேண்டும். இந்த வங்கி உத்தரவாதம் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் முறையாக உரிமம் பெற்ற ஏதேனும் நிறுவனத்திலிருந்து பெறப்படுதல் வேண்டும்.

ஆ) பங்குபற்றுநர் ஒருவரால் கொடுத்துதவப்பட்ட வங்கி உத்தரவாதம் ஒன்றின் பயன்பாடு பின்வரும் சூழ்நிலைகளிற்கு வரையறுக்கப்படல் வேண்டும்.

i. CDS இன் நட்டங்கள் அல்லது பொறுப்புக்களை திருப்திப்படுத்துவதற்காக

ii. CDS இன் தொழிலின் தொழிற்பாட்டிற்கு இடைநேர்விளைவான CDS இன் நட்டங்களை அல்லது பொறுப்புக்களைத் திருப்திப்படுத்துவதற்காக

## பிரிவு 3

## பிணையங்கள்

### 3.1 தகவுடைய பிணையங்கள்

அ. நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்

ஆ. நிரற்படுத்தப்படாத பிணையங்கள்

இ. பிணையங்கள் சான்றிதழ்களை வழங்குதல் உட்பட பிணையங்களை நிரலிலிருந்து நீக்குதல்/பதிவை இல்லாமல் செய்தல் தொடர்பில் செயற்பாடுகளின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும்வரை CSE இனால் நிரலில் இருந்து நீக்கப்படுகின்ற அத்தகைய பிணையங்கள்

### 3.2 பிணைய ஐடி

CDS ஆனது அனைத்துப் பிணையங்கள் தொடர்பிலும் CSE இனால் குறித்தளிக்கப்பட்ட பிணைய ஐடி ஐப் பயன்படுத்துதல் வேண்டும்.

### 3.3 சர்வதேச பிணைய இனங்காணல் இலக்கம் (ISIN)

CDS ஆனது ஒவ்வொரு பிணையத்திற்கும் CSE இனால் குறித்தளிக்கப்பட்ட தனித்துவமான பிணைய இனங்காணல் இலக்கத்தைப் பயன்படுத்தல் வேண்டும்.

### 3.4 பிணையங்களின் தகவுடைமையை ஏற்றுக்கொள்ளுதல்/இடைநிறுத்துதல்

CDS ஆனது எந்தத் தேதியன்று பிணையமொன்று தகவுடைய பிணையமொன்றாக வருகின்றதோ அல்லது தகவுடைய பிணையமொன்றாக இருப்பது இல்லாதொழிகின்றதோ அந்தத் தேதியன்று பங்குபற்றுநர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

பிரிவு 4

## வாடிக்கையாளர் கணக்குகள்

### 4.1 CDS இல் யார் வாடிக்கையாளர் கணக்குகளைத் திறக்கலாம்.

பங்குபற்றுநர்கள், கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றின் அல்லது இயற்கை ஆள் ஒருவரின் சார்பில் CDS இல் வாடிக்கையாளர் கணக்கைத் திறக்கலாம்; ஆயினும், பின்னர் கூறப்படும் இயற்கை ஆள் ஒருவர் விடயத்தில் அவர் பதினெட்டு வயதை (18வயது) அடைந்தவராக அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். இவ் விதியின் நோக்கங்களுக்காக "ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு" என்பது இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி, கூட்டுத்தாபனம் அல்லது உருவகம் அல்லது ஒரு நியதிச் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட ஒரு நியதிச் சட்டக்குழு எனப் பொருள்கொள்ளுதல் வேண்டும். பங்குபற்றுநர்கள், எந்த ஆட்களுக்கு வாடிக்கையாளர் கணக்குகள் திறக்கப்படுகின்றதோ அந்த ஆட்கள் ஒப்பந்தத்திற்கான சட்ட ஆளுமையைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

பங்குபற்றுநர்கள் ஏதேனும் சட்டத்தின் கீழ் அத்துடன்/அல்லது ஒழுங்குவிதியின் கீழ் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு தடைசெய்யப்பட்டிருக்கின்ற ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு இயற்கை ஆள் என்பவற்றுக்காக வாடிக்கையாளர் கணக்கொன்றைத் திறத்தலாகாது.

### 4.2 வாடிக்கையாளர் கணக்குகளைத் திறப்பதற்கான விண்ணப்பங்கள்

விண்ணப்பதாரர்கள் காலத்திற்குக் காலம் ஏற்புடையற்பாலனவான விண்ணப்பப் படிவத்தில் மற்றும் கடிதங்கள் அல்லது சுற்றுநிருபங்கள் என்னும் வடிவத்தில் பங்குபற்றுநருக்கு வழங்கப்படுகின்ற CDS தொழிற்பாட்டு வழிகாட்டு நெறிகளில் மற்றும் நடவடிக்கை முறைகளில் தேவைப்படுகின்றதான தகவலை வழங்க வேண்டும்.

இவ்விதிகளுடன் அல்லது CDS தொழிற்பாட்டு வழிகாட்டு நெறிகளுடன் மற்றும் நடவடிக்கை முறைகளுடன் ஒத்திசையாத ஏதேனும் கணக்குத் திறக்கும் விண்ணப்பம் CDS இனால் செய்முறைப்படுத்தப்படலாகாது. இது தொடர்பில் CDS இன் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

CDS ஆனது விண்ணப்பம் ஒன்றில் வழங்கப்பட்ட தகவலின் மெய்யான தன்மை/உண்மைத் தன்மை ஆகியவற்றில் சந்தேகத்திற்காக நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்தால் அல்லது விண்ணப்பம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால் CDS பரிசீலனை அல்லது விசாரணைகளுக்குப் பின்னர் அத்தகைய விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றது.

**4.3 பல்தரப்பட்ட வாடிக்கையாளர் கணக்குகள்**

அ) இயற்கை ஆள் ஒருவர் பின்வரும் முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்கை திறப்பதற்கும் பராமரிப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றார்.

(i) வெவ்வேறுபட்ட பங்குபற்றுநர் ஊடாக, இயற்கை ஆள் ஒருவரினால் கணக்குகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்படலாம். CDS ஆனது இயைபான பங்குபற்றுநரின் பங்குபற்றுநர் குறியீட்டுடன் அத்தகைய ஆளுக்கான ஒரு தனித்துவமான கணக்கு இலக்கத்தை குறித்தளித்தல் வேண்டும்.

(ii) இயற்கை ஆள் ஒருவர் அதே பங்குபற்றுநருடன் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்கைத் திறப்பதற்கும் பராமரிப்பதற்கும் அனுமதிக்கப்படலாகாது.

ஆ) ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு அதே பங்குபற்றுநர் அல்லது வேறுபட்ட பங்குபற்றுநர் ஊடாக ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளைத் திறப்பதற்கும் பராமரிப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றது. கணக்குகள் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் திறக்கப்படுகின்றபோது CDS ஆனது இயைபான பங்குபற்றுநரின் பங்குபற்றுநர் குறியீட்டுடன் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்காக ஒரு தனித்துவமான கணக்கு இலக்கத்தை குறித்தளித்தல் வேண்டும்.

ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு அதே பங்குபற்றுநருடன் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை திறக்கலாம் என்பதுடன் பேணலாம் ஆயினும் அத்தகைய கணக்குகள் பின்வரும் நோக்கங்களுக்காக திறக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும். அதாவது:

(i) நியதிச் சட்டம் ஒன்றின் கீழ்/ CSE விதிகளின் கீழ் தேவைப்படுத்தினால்

(ii) முதலீட்டுப் பிணையங்களின் வகையினை பிரித்தல் (segregation of portfolios)

(iii) CDS இற்கு ஏற்புடையற்பாலதான வேறு ஏதேனும் அதே நோக்கங்கள்

ஆயினும் எவ்வாறாயினும் CDS ஆனது அத்தகைய கணக்குகளைத் திறக்கும்போது, வெளிப்படையான, உட்கிடையான, அல்லது வருவிக்கப்படுவதான ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பின் அறிவித்தலை அங்கீகரித்தலாகாது என்பதுடன் CDS ஆனது எல்லா நோக்கங்களுக்குமாக அத்தகைய கணக்கின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக கணக்குத் தலைப்பில் முதலாவதாகக் காணப்படுகின்ற பெயரைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**4.4 வாடிக்கையாளர் கணக்குகளின் தொழிற்பாடு**

அ) வாடிக்கையாளர் கணக்கொன்று தொடர்பான எல்லா அறிவுறுத்தல்களும், எந்தப் பங்குபற்றுநர் ஊடாக அத்தகைய கணக்கு வைத்திருப்பவர் பதிவு செய்யபட்டிருக்கின்றாரோ அந்தப் பங்குபற்றுநர் ஊடாக மட்டும் CDS இற்கு கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்படுதல் வேண்டும். CDS ஆனது ஏதேனும் மேலதிக விசாரிப்புக்கள் இன்றி அத்தகைய அறிவுறுத்தல்கள் மீது செயலாற்றுதல் வேண்டும்.

CDS ஆனது அதன் அபிப்பிராயப்படி அத்தகைய அறிவுறுத்தல்கள் அதன்மீது செயலாற்றுவதற்கு CDS இற்கு போதுமான விபரங்களைக் கொண்டிருக்காவிடின் பங்குபற்றுநர் ஒருவரால் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்கள் மீது செயலாற்றுவதற்கு கடப்பாடுகள் எதனையும் கொண்டிருக்காது. ஆயினும், அவ்வாறு முடிவு செய்திருப்பதன் மேல், CDS ஆனது இரண்டு (2) சந்தை நாட்களினுள் அத்தகைய அறிவுறுத்தல்கள் பயனுறுவதற்கான தேவைப்பாடு இருக்கக்கூடும் எனக் கருதப்படும் மேலதிக தகவலை பங்குபற்றுநருக்கு அறிவித்தல் வேண்டும்.

ஆ) CDS இற்கான வாடிக்கையாளர் கணக்குகள் தொடர்பாக ஏதேனும் பிழையான அல்லது தவறான தகவல் தொடர்பாடலுக்கு பங்குபற்றுநர் பொறுப்புடையவராகவும் கடப்பாடுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

இ) பிணையங்களின் கட்டுப்பண பத்திரமற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் பிரத்தியேக நோக்கத்திற்காக கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது அவர் சார்பில், வாடிக்கையாளர் கணக்கொன்றில் வைத்திருக்கப்படும் பிணையங்கள் CDS இனால் வைத்திருக்கப்படுதல் வேண்டும். CDS இன் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் இவ்விதிகளின் ஏற்பாடுகளிற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

ஈ) ஒரு வாடிக்கையாளர் கணக்கினது கணக்குத் தலைப்பில் (இணைந்த கணக்குகள் தவிர வேறு) ஒன்றுக்கு மேற்பட்ட பெயரைக் கொண்டிருக்கும்பட்சத்தில், CDS ஆனது எவ்வாளுடைய பெயர் கணக்குத் தலைப்பில் முதலாவதாக காணப்படுகின்றதோ அவ்வாள் CDS மூலம் அறிவுறுத்தல்களைப் பெறும் நோக்கங்களுக்காக மட்டும் அங்கீகரித்தல் வேண்டும்.

உ) CDS ஆனது பிழை/செம்மையற்ற தன்மை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் ஏதேனும் காலத்தில் வாடிக்கையாளர் கணக்கொன்றிற்குச் செய்யப்பட்ட பிழையான/செம்மையற்றதான பதிவை சரிபார்ப்பதற்கு உரிமையை உடையதாகும்.

ஊ) ஆவணங்கள் ஆனவை முரண்பாடுகள் காரணமாக பங்குபற்றுநருக்கு CDS இனால் திருப்பி அனுப்பப்படுகின்றபோது, அத்தகைய ஆவணங்கள் ஆனவை அதனைத் திருப்பி அனுப்புவதற்கான காரணம்/காரணங்களைக் குறித்துரைக்கின்ற ‘‘திருப்பியனுப்பப்படும் ஆவண பட்டியல்’’ ஒன்றின் உறையினுள் இட்டு திருப்பி அனுப்பப்படல் வேண்டும். பங்குபற்றுநர்கள் குறித்த ஆவணம் கிடைக்கப்பெற்றதென்பதை உறுதி செய்த பின்னர் அத்தகைய ஆவணங்களைச் சேகரித்தல் வேண்டும்.

## 4.5 வாடிக்கையாளர் கணக்குக்குச் செய்யப்பட்ட பதிவுகள்

வாடிக்கையாளர் கணக்கானது பின்வரும் சந்தர்ப்பங்களில் பிணையங்களுடன் வரவு வைக்கப்படுதல் வேண்டும்:

அ) பிரிவு 5இன்படி வாடிக்கையாளர் கணக்கினுள் பிணையங்களைக் கொள்வனவு செய்தல்.

ஆ) பிரிவு 7இன் பிரகாரம் வாடிக்கையாளர் கணக்கினுள் பிணையங்களின் உருப்பொருள் நீக்கம்/வைப்பு

இ) 10ம் பிரிவின்படி புதிய பங்கு வழங்கல், உரிமைப் பங்கு வழங்கல், ஒதுக்கங்களை மூலதனமாக்குதல் மூலம் பங்கு வழங்கல் அல்லது மேலதிகப் பங்கு வழங்கல் தொடர்பில் கணக்கு வைத்திருப்பாளரின் சார்பில் நிரற்படுத்தப்பட்ட உருவகம் ஒன்றினால் மேற்கொள்ளப்படும் பிணையங்களின் நேரடி வைப்பு அல்லது நிரற்படுத்தப்பட்ட உருவகம் ஒன்றின் பங்குகளின் உப பிரிவுமூலம்.

ஈ) 9ஆம் பிரிவின் பிரகாரம் வாடிக்கையாளர் கணக்கிற்கு பிணையங்களை மாற்றுதல்.

வாடிக்கையாளர் கணக்கொன்றில் பின்வரும் சந்தர்ப்பங்களில் பிணையங்களைப் பற்று வைக்கப்படல் வேண்டும்:-

அ) பிரிவு 5இன் பிரகாரம் வாடிக்கையாளர் கணக்கிலிருந்தான பிணையங்களின் விற்பனை

ஆ) 8ஆம் பிரிவின் பிரகாரம் வாடிக்கையாளர் கணக்கிலிருந்தான பிணையங்களின் உருப்பொருள் ஆக்கம்/மீளப்பெறல்

இ) 9ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு வாடிக்கையாளர் கணக்கிலிருந்து இன்னொரு வாடிக்கையாளர் கணக்கிற்கு பிணையங்களை மாற்றுதல்.

ஈ) பின்வரும் சந்தர்ப்பங்களில் நிரற்படுத்தப்பட்ட உருவகத்தினால் அறிவிக்கப்படுவதன்மீது:

- 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பங்குகளை மீள் கொள்வனவு செய்தல். (கம்பனிச் சட்டம்)

- கம்பனிச் சட்டத்தின் கீழான நிரற்படுத்தப்பட்ட உருவகத்தினால் கொள்வனவு செய்யப்படும் சிறுபான்மை கட்டுப்படுத்தும் பங்குகள்.

- கம்பனிச் சட்டத்தின் கீழான பங்குகளின் மீட்பு-

உ) நிரற்படுத்தப்பட்ட உருவகத்தினால் பங்குகளின் ஒன்றுதிரட்டல் தொடர்பில் கணக்குவைத்திருப்பாளரின் சார்பில் பிணையங்களை நேரடி வைப்பிலிடுதல்.

## 4.6 வாடிக்கையாளரின் கணக்கை இடைநிறுத்தல்/மூடிவிடுதல்

### அ) வாடிக்கையாளர் கணக்கொன்றை இடைநிறுத்தல்

CDS ஆனது வாடிக்கையாளர் கணக்கொன்று மீதான தொடர்புகளை பின்வரும் சந்தர்ப்பங்களில் இடைநிறுத்தல் வேண்டும்.

i. பின்வரும் எவையேனும் ஆட்கள்/நிறுவனங்களினால் அவ்வாறு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருப்பின்;

- பங்குபற்றுநர் ஊடாக கணக்கு வைத்திருப்பவர்.
- நீதிமன்றங்கள்
- SEC.

ii. இயைபான பங்குபற்றுநர் ஊடாக கணக்கு வைத்திருப்பவரின் இறப்பு தொடர்பில் இயைபான அதிகாரசபையினால வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றின் கிடைப்பனவு மீது;

iii. இவ்விதிகளின் விதி 11.2இன் நியதிகளின்படி

**ஆ) வாடிக்கையாளர் கணக்கை மூடிவிடுதல்.**

CDS ஆனது வாடிக்கையாளர் கணக்கை பின்வரும் சந்தர்ப்பங்களில் மூடிவிடுதல் வேண்டும்:-

- பங்குபற்றுநர் ஊடாக கணக்கு வைத்திருப்பாளரினால் அவ்வாறு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருப்பின் (அவசியமாகக்கூடியவாறான உரிய தெளிவுபடுத்தல்களைப் பெற்ற பின்னர்) அல்லது,

- 4.7 (அ)(iii) என்னும் நியதிகளின்படி

இ) வாடிக்கையாளர் கணக்கானது இடைநிறுத்தப்பட்டு/மூடப்பட்டு இருக்கும் பட்சத்தில் CDS ஆனது வாடிக்கையாளர் கணக்கின் (ஏற்புடைமையான) இடைநிறுத்தல்/மூடிவிடுதல் தொடர்பில் பங்குபற்றுநர் ஊடாக இயைபான கணக்கு வைத்திருப்பவர்களுக்கு முறையாக அறிவித்தல் வேண்டும்-

**4.7 தொழிற்பாடற்ற வாடிக்கையாளர் கணக்கு**

**அ) முதலீட்டு (Portfolio) மீதியின்றிய வாடிக்கையாளர் கணக்குகள்**

அத்தகைய வாடிக்கையாளர் கணக்கை நிறைவேற்றுவதற்கான இறுதி கொடுக்கல் வாங்கல் தேதியிலிருந்து மூன்று ஆண்டு (3) காலப்பகுதியொன்றுக்காக பங்குப்பட்டியல் மீதியின்றி வாடிக்கையாளர் கணக்கு செயற்பாடற்று இருப்பின்,

i. CDS ஆனது தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கொன்றாக அத்தகைய கணக்கை நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கணக்கின் செயற்படுத்தாமை காரணமாக தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கொன்றாக நிர்ணயிக்கப்பட்டதென்பதை இயைபான பங்குபற்றுநருக்கு அறிவித்தல் அனுப்புதல் வேண்டும்.

ii. CDS ஆனது தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு எவையேனும் அறிவித்தல்களை/கூற்றுக்களை அனுப்புதலாகாது.

iii. தொழிற்பாடற்ற வாடிக்கையாளர் கணக்கொன்றாக அத்தகைய கணக்கை பெயர்குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத (6) கால முடிவின்மீது, CDS ஆனது தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கை அதனுடைய சொந்தத் தற்றுணிபில் மூடிவிடுதல் வேண்டும்.

iv. கணக்கு வைத்திருப்பவர் கணக்கை தொழிற்படுத்துவதற்குத் தேவைப்படுத்துகின்ற பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவர் இயைபான பங்குபற்றுநருடாக புதிய கணக்கைத் திறப்பதற்கான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவின் உங்களுடைய வாடிக்கையாளரை அறிந்து கொள்ளல் (KYC) தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

### ஆ) பங்கு முதலீட்டு வகை மீதியைக் கொண்டுள்ள வாடிக்கையாளர் கணக்குகள்

முதலீட்டு வகை மீதியைக் கொண்டுள்ள வாடிக்கையாளர் கணக்கு, அத்தகைய வாடிக்கையாளர் கணக்கில் நிறைவேற்றப்பட்ட கடைசிக் கொடுக்கல் வாங்கல் திகதியிலிருந்து மூன்று (3) ஆண்டுகள் காலப்பகுதியொன்றுக்கு தொழிற்படாமலிருக்கும் பட்சத்தில்-

i. CDS ஆனது இயைபான பங்குபற்றுநருக்கு அத்தகைய கணக்கு செயற்பாடற்றமை எனும் காரணத்தினால் தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கொன்றாக குறித்தொதுக்குவதற்கு CDS எண்ணியுள்ளமையை அறிவிக்கும் முதற்கட்ட அறிவித்தலொன்றை அனுப்புதல் வேண்டும்.

ii. CDS ஆனது அத்தகைய கணக்கின் செயற்பாடற்றமை எனும் காரணத்தினால் தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கொன்றான வாடிக்கையாளர் கணக்கைக் குறித்தொதுக்குவதற்கு CDS

எண்ணுகின்றமையை அறிவிக்கும் முதற்கட்ட அறிவித்தலொன்றை இயைபான பங்குபற்றுநருக்கு அறிவித்தல் வேண்டும்.

iii. முதற்கட்ட அறிவித்தல் தேதியிலிருந்து மூன்று (03) மாதங்களின் முடிவின்மீது CDS ஆனது தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கொன்றாக அத்தகைய கணக்கைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

iv. CDS ஆனது தொழிற்படா வாடிக்கையாளர் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு எவையேனும் அறிவித்தல்களை/கூற்றுக்களை அனுப்புதலாகாது.

v. அவருடைய/அவளுடைய தொழிற்படா வாடிக்கையாளர் கணக்கை செயற்படுத்துவதற்குத் கணக்கு வைத்திருப்பவர் தேவைப்படுத்துகின்ற பட்சத்தில், அத்தகைய கணக்கு வைத்திருப்பாளர் இயைபான பங்குபற்றுநர் ஊடாக புதிய கணக்கைத் திறப்பதற்கான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவின் உங்களுடைய வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளும் தேவைப்பாடுகளுடன் (KYC) இணங்கியொழுகுதல் வேண்டும்.

பிரிவு 5

## கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளைப் பதிவு செய்தல்

### 5.1 பிணையங்களின் கொள்வனவு/விற்பனை

வாடிக்கையாளர் கணக்குகள் CSE இன் தன்னியக்க வியாபார முறைமையினூடாக பங்குபற்றுநர்களினால் நிறைவேற்றப்பட்ட வியாபாரங்கள் தொடர்பில் பிணையங்கள் பற்று வைக்கப்படுதல் வேண்டும் அல்லது வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்டவாறான நிறைவேற்றப்படும் வியாபாரப் பற்றுவைக்கப்பட்ட வரவுவைக்கப்பட்ட எல்லாப் பிணையங்களும் வலிதுடையதாதல் வேண்டும். CDS ஆனது அத்தகைய வியாபாரம் தொடர்பில் CSE இனால் ஏற்பாடு செய்யப்பட்ட தகவலின்மீது தனியே தங்கியிருத்தல் வேண்டும்.

CDS ஆனது பங்குபற்றுநர் மற்றும் கணக்கு வைத்திருப்பாளரின் சார்பில் நிறைவேற்றப்படும் வியாபாரங்கள் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவருக்கும் பங்குபற்றுநருக்குமிடையில் எழுகின்ற ஏதேனும் பிணக்குக்கு பொறுப்புடைமையாக்கப்படமாட்டாது.

### 5.2 பங்குகளைக் கைமாற்றுதல் மற்றும் பதிவு செய்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 86(2)ஆம் பிரிவின் நியதிகளின்படி CDS இனால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுவதான நிரற்படுத்தப்பட்ட உருவகம் ஒன்றின் எவையேனும் பங்குகள் தொடர்பில் பங்கு பதிவேட்டில் நம்பிக்கைப்பொறுப்பு பற்றிய அறிவித்தலானது பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து, எவ் ஆளொருவரின் நன்மைக்காக நம்பிக்கைப்பொறுப்பு வைத்திருக்கப்படுகின்றதோ அவ்வாள்-

அ) அத்தகைய உருவகம் இன் பங்கு வைத்திருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

ஆ) குறித்த நபரின் பெயர் கம்பனிப் பங்குப் பதிவேட்டில் பங்குதாரராகப் பதிவு செய்யப்பட்டிருப்பது போன்று, 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின்கீழ் அப்பங்குகள் தொடர்பில் உள்ள எல்லா உரிமைகளுக்கும்

சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராவர் என்பதுடன் அப்பங்குகள் தொடர்பில் எல்லா கடமைகளுக்கும் கடப்பாடுகளுக்கும் பொறுப்புடையவராவார்.

**5.3 இருபது மில்லியன் (20 mn) பெறுமதியான அத்துடன் அதற்கு மேலாக பங்குகளைக் கொள்வனவு செய்தல்**

அ) 20 மில்லியனுக்குச் சமனாக அல்லது அதற்கு மேற்பட்ட குறித்த சந்தைநாளின்போது குறித்த பிணையம் தொடர்பில் குறித்த வாடிக்கையாளரின் சார்பில் (நம்பிக்கைப்பொறுப்பு வங்கிகள் தவிர்ந்த) எவரேனும் பங்குபற்றுநரால் நிறைவேற்றப்பட்ட எல்லாக் கொள்வனவுகளின் கூட்டுப்பெறுமதியாகவுள்ள பட்சத்தில், அத்தகைய பங்குபற்றுநர் வியாபார நாளுடன் ஒன்றைக் கூட்டி +1(T+1) 9:00 மணியளவில் CDS சார்பில் CDS க்கு அல்லது வங்கி உத்தரவாதத்துக்கு நிச்சயமான நிதிகளின் வடிவத்தில் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கூட்டு பெறுமதியின் ஆகக்குறைந்த எல்லை 15% இனை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

ஆ) பங்குபற்றுநர்கள் கொடுத்துத் தீர்க்கும் வங்கியொன்றில் பேணப்படும் தனிவேறான கணக்கொன்றினுள் அத்தகைய எல்லைகளை வைப்பிலிடுதல் வேண்டும். அத்துடன் “எல்லை வைப்புக் கணக்கு” கணக்கு என பெயரிடப்படும். CDS ஆனது பங்குபற்றுநரின் அறிவுறுத்தலுக்கிணங்க கொடுத்துத் தீர்த்தலை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக மட்டும் அத்தகைய பண எல்லையை பயன்படுத்துதல் வேண்டும். கொடுத்துத் தீர்க்கத் தவறும் பட்சத்தில், CDS ஆனது கொடுத்துத் தீர்க்கும் வசதிக்கான பண எல்லை பயன்படுத்துதல் வேண்டும்.

இ) மாற்றீடாக பங்குபற்றுநர்கள் CDSஇன் சார்பாக கணக்கு வைத்திருப்பவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட CDS இனால் ஏற்றுக்கொள்ளப்படும் படிவத்தில் வங்கி உத்தரவாதம் ஒன்றை சமர்ப்பிக்கலாம். CDS ஆனது கொடுத்துத் தீர்க்கத் தவறும் பட்சத்தில் வங்கி உத்தரவாதத்தினை அமுல்படுத்தல் வேண்டும்.

ஈ) பங்குபற்றுநர் தேவையான சலுகை மிகையை வழங்குவதற்கு தவறும் பட்சத்தில் CDS ஆனது SEC யுடனான கலந்தாலோசனையால் அவசியமானதெனக் கருகின்றதான நடவடிக்கையை எடுப்பதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். அத்தகைய செயற்பாடெதுவும் CDS மற்றும் CSE இன் விதிகளின் நியதிகளின் பிரகாரம் அதன் பொறுப்புடைமையினை பங்குபற்றுநர் விடுவித்தலாகாது.

உ) வியாபாரமானது நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினால் உறுதிப்படுத்தாதுவிடின் பங்குபற்றுநர் 9:00 மணியளவின் T+2 இனால் எல்லைகளை சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

இவ்விதிகளின் நோக்கத்துக்காக:

“அனுமதித்த நிதிகள்” என்பது, சரிபார்க்கப்பட்ட மற்றும் மீளப் பெறலுக்குக் கிடைக்கக்கூடியதான நிதிகள் எனப் பொருள்படும்.

“வியாபார உறுதிப்பாடு” என்பது T+1 அன்று 14:30 மணியளவில் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினூடாகப் பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளரின் சார்பில் பங்குத் தரகர் பங்குபற்றுநரால் நிறைவேற்றப்பட்ட வியாபாரத்தின் நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினாலான ஏற்பு எனப் பொருள்படும்.

பிரிவு 6

## நிதிகளைக் கொடுத்துத் தீர்த்தலுக்கான வசதிப்பாடு

### 6.1 கொடுத்துத் தீர்க்கும் வங்கி/ வங்கிகளின் நியமனம்

CSE இனூடாக பங்குப் பரிவர்த்தயாளர்களினால் நிறைவேற்றப்படும் வியாபாரங்களுக்கான நிதியங்களின் கொடுத்துத் தீர்த்தலை வசதிப்படுத்தும் பொருட்டு, (உள்ளக பங்குபற்றுநர்களுக்கிடையேயான கொடுத்து தீர்த்தல்) CDS ஆனது கொடுத்துத் தீர்க்கும் வங்கி/வங்கிகளாக பணியாற்றுவதற்கு (திருத்தப்பட்டவாறான) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வர்த்தக வங்கிகளை நியமித்தல் வேண்டும். நிதியங்களின் பங்குபற்றுநர்களுக்கு இடையேயான கொடுத்துத் தீர்த்தலுக்காக வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக அத்தகைய கொடுத்துத் தீர்த்தல் வங்கிகளில் எவையேனும் ஒன்றுடன் ஒரேயொரு கணக்கு மட்டும் திறக்க முடியும்.

6.2 பங்குபற்றுநர்களுக்கு இடையேயான கொடுத்துத் தீர்த்தல்

அ) CSE இல் வியாபாரம் செய்யப்பட்ட பங்குகளுக்கான நிதியங்களின் பங்குபற்றுநர்களுக்கு இடையேயான கொடுத்துத் தீர்த்தலானது, CDS இனால் வழங்கப்பட்ட கொடுத்துத் தீர்த்தல் அட்டவணைகளுக்கிணங்க கொடுத்துத் தீர்க்கும் வங்கி/வங்கிகளினூடாக கொடுத்துத் தீர்த்தல் தேதியாக இதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபார நாளின் பின்னர் (T+3) மூன்றாவது சந்தை நாளன்று 10.30 மணித்தியாலங்களில் இடம்பெறுதல் வேண்டும். பங்குபற்றுநர்களுக்கு இடையேயான கொடுத்துத் தீர்த்தலானது கொடுத்துத் தீர்க்கும் தேதியன்று 10.30 மணித்தியாலங்களில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

ஆ) CDS ஆனது இவ் விதிகளுக்கிணங்க செலுத்தப்படற்பாலனவும் பெற்றுக்கொள்ளப்படப்பாலனவுமான தொகைகளை தன்னகத்தும் பங்குபற்றுநர்களுக்கும் வரவு அல்லது செலவு வைத்தல் வேண்டும்.

இ) CDS ஆனது ஒவ்வொரு சந்தை நாளன்றும் குறித்த கொடுத்துத் தீர்க்கும் தேதியன்று ஒவ்வொரு பங்குப் பரிவர்த்தனையினராலும் தீர்க்கப்பட வேண்டிய பங்குபற்றுநரினுடைய கணக்கு மற்றும் தேறிய தொகையினுள் பதிவு

செய்யப்பட்டுள்ள வரவுகள் மற்றும் செலவுகள் (credits) பிரதிபலிக்கின்ற கொடுத்துத் தீர்க்கும் அட்டவணையை வழங்குதல் வேண்டும்.

ஈ) வாங்குநர் பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுத்துத் தீர்க்கும் தேதியன்று 09.00 மணியளவில் வாங்குகின்ற பங்குத் தரகர் பங்குபற்றுநர்/நம்பிக்கைப்பொறுப்பு வங்கிக்கு ''அனுமதிக்கப்பட்ட நிதிகள்'' கிடைக்கப்பெறச் செய்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

உ) பங்குத் தரகர் பங்குபற்றுநர்கள் போதுமானளவு அனுமதிக்கப்பட்ட நிதிகள் CDS இனால் வழங்கப்பட்ட கொடுத்துத் தீர்க்கும் அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய பங்குபற்றுநரினால் நிறைவேற்றப்படும் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற கொடுப்பனவைத் தீர்ப்பதற்கு கொடுத்துத் தீர்த்தல் தேதியன்று 09.30 மணியளவில் கொடுத்துத் தீர்த்தல் வங்கிக் கணக்கில் கிடைக்கப்பெறச் செய்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஊ) நம்பிக்கைப்பொறுப்பு வங்கிகள் போதுமானளவு அனுமதிக்கப்பட்ட நிதிகள் CDS இனால் வழங்கப்பட்ட கொடுத்துத் தீர்த்தல் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினால் நிறைவேற்றப்படும் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற கொடுப்பனவைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு கொடுத்துத் தீர்த்தல் தேதியன்று 09.30 மணியளவில் கொடுத்துத் தீர்த்தல் வங்கியில் கிடைக்கப் பெறச் செய்தல் வேண்டும்.

இவ்விதியின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட நிதிகள் என்பது உரிய கொடுத்துத் தீர்த்து வைக்கும் வங்கியில் மீள் எடுத்தலுக்காக மாற்றப்பட்டும் கிடைக்கப்பெறுவனவான நிதிகள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

**6.3 நம்பிக்கைப்பொறுப்பு வங்கிகளினால் வியாபார உறுதிக் கூற்றுக்கள்/நிராகரிப்புக்கள்**

CDS இலுள்ள நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினூடகப் பதிவு செய்யப்பட்ட கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் நிறைவேற்றப்படும் வியாபாரங்கள் காலத்துக்குக் காலம் CDS இனால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வியாபார நாளுடன் ஒன்றைக் கூட்டி (T+1) 14.30 மணியளவில் அந்தந்த நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினால் உறுதிப்படுத்தப்படுதல்/நிராகரிக்கப்படுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும், T+1 இன்மீது 14.30 மணிக்குமுன்னர் வியாபாரமொன்றை உறுதிப்படுத்துவதற்கு அல்லது நிராகரிப்பதற்குக் காப்பாளர் வங்கியின்மீது விதிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட தேவைப்பாடு,

எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி வசதியைப் பயன்படுத்தி கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் (CSE) தன்னியக்கமாக்கப்பட்ட வியாபார முறைமையின்மீது (ATS) நிறைவேற்றப்பட்ட வியாபாரங்கள் தொடர்பில் ஏற்புடையற்பாலதாதலாகாது.

நம்பிக்கைப்பொறுப்பு வங்கி எத்தன்மைத்தான ஏதேனும் காரணத்துக்காக இவ்விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்னர் பங்குத் தரகர் பங்குபற்றுநர் ஒருவரினால் நிறைவேற்றப்படும் வியாபாரமொன்றை உறுதிப்படுத்தத் தவறுகின்றபட்சத்தில், அத்தகைய உறுதிப்படுத்துவதற்கான தவறுகையானது நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினால் வியாபாரத்தின் நிராகரிப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினால் வியாபார நாளுடன் ஒன்றைக் கூட்டி வியாபாரத்தை நிராகரிக்கும் பட்சத்தில், CDS ஆனது நிதிகளைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கங்களுக்காக வியாபாரத்தை நிறைவேற்றுகின்றவரான பங்குத் தரகர் பங்குபற்றுநருடன் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு வங்கியை பதிலீடு செய்தல் வேண்டும். அத்தகைய பங்கு வியாபாரத்தை நிறைவேற்றுகின்ற பங்குத் தரகர் பங்குபற்றுநர் அத்தகைய வியாபாரத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு பொறுப்புடையவராதல் வேண்டும்.

**6.4 கொடுப்பனவின் தவணைத் தவறுகையிலுள்ள வாங்குநர்**

இந்த விதி 6.4, கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் (CSE) தன்னியக்கமாக்கப்பட்ட வியாபார முறைமையின்மீது (ATS) எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதியொன்றாக நிறைவேற்றப்பட்ட வியாபாரங்கள் தொடர்பில் ஏற்படுத்தப்படுதலாகாது.

**அ) தவறுகையிலுள்ளதான கொடுப்பனவு தொடர்பில் பிணையங்களின் விற்பனை**

கொடுத்துத்தீர்த்தல் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொடுப்பனவைச் செய்வதற்கு வாங்குபவர் தவறுமிடத்து வாங்கும் பங்குத் தரகரான பங்குபற்றுநர் T+3 ஆகவுள்ள கொடுத்துத் தீர்க்கப்படும் தேதியின் பின்னரான ஏதேனும் நாளன்று தவறுகையிலுள்ள கொடுப்பனவு தொடர்பில் தனது பூரண தற்துணிவில் பிணையங்களை விற்கலாம்.

**எவ்வாறாயினும் கொடுப்பனவின் தவணை தவறுகையிலுள்ள வாங்குநர் நம்பிக்கைப்பொறுப்பு வங்கியொன்றினூடாக பதிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் மற்றும் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு வங்கி இவ்விதிகளின் விதி 6.3 இன் நியதிகளின்படி வியாபாரத்தை உறுதிப்படுத்தியுள்ளபட்சத்திலும் பங்குத் தரகர்,**

**பங்குபற்றுநர் இயைபான நம்பிக்கைப்பொறுப்பு வங்கியிலிருந்து விற்பதற்கு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொண்டதன்மேல் மட்டும் அத்தகைய பிணையங்களை விற்றல் வேண்டும்.**

**ஆ) கொடுத்துத் தீர்த்தல் தேதியன்று (T+3) வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநர்களின் கொடுத்துத் தீர்த்தல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக தவணை தவறுகையிலுள்ள வாங்குநர் ஒருவர் தொடர்பில் பிணையங்களின் கைமாற்றம்.**

(திருத்தப்பட்டவாறான) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து, உடனடியாக கடன் வசதி ஒன்றைப் பெறுவதற்கு வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநர் தேவைப்படுத்தும்பட்சத்தில் பின்வரும் கொடுத்துத் தீர்த்தல் தேதியன்று வாங்கும் பங்குத் தரகர், பங்குபற்றுநரின் கொடுத்துத் தீர்த்தலுக்கான கடப்பாடுகளை எய்தும் பொருட்டு –

i. வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநர், கொடுத்துத் தீர்க்கும் தேதியன்று 09.00 மணியளவில் மற்றும் இயைபான CDS படிவம்/படிவங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநரின் பெயர்குறித்த CDS கணக்குக்கு வாங்குநருடைய வாடிக்கையாளர் கணக்கிலிருந்து தவறுகையிலுள்ள கொடுப்பனவு தொடர்பில் பிணையங்களைக் கைமாற்றுவதற்கான CDS இன் வேண்டுகோளினால் வாங்குபவரின் தவறுகையினை CDS க்கு அறிவித்தல் வேண்டும்.

ii. CDS ஆனாது தவறுகையிலுள்ள கொடுப்பனவு தொடர்பில் பிணையங்களைப் பின்வருவனவற்றிடமிருந்து அதன் பின்னர் கைமாற்றும்.

- வாங்குநருடைய வாடிக்கையாளர் கணக்கிலிருந்து வாங்குகின்ற பங்குத் தரகர் பங்குபற்றுநரின் பெயர் குறித்த CDS களுக்கு ; அத்துடன்

- வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநரின் CDS கணக்கிலிருந்து உடனடியான கடன் வசதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பங்குத் தரகர் பங்குபற்றுநரை இயலச் செய்வதற்கு வர்த்தக வங்கியின் பெயர்குறித்த CDS கணக்குக்கு

***இ) வியாபாரத்தின் பூரண பெறுமதியை மேவுவதற்குப் போதுமற்றளவில் வங்கியினால் கடன் விரிவாக்கப்பட்டிருப்பின், வாங்குகின்ற பங்குத் தரகர் பங்குபற்றுநர்***

***செலுத்தப்பட்டதும் அதே தவறுகையிலுள்ள வாடிக்கையாளருக்குச் சொந்தமான ஏனைய பங்குகளை அடைமானம் வைத்தல் வேண்டும்:-***

***(i) செலுத்தப்பட்டதும் அதே தவறுகையிலுள்ள வாடிக்கையாளருக்குச் சொந்தமானதுமான ஏனைய பங்குகளை அடைமானம் வைப்பதற்கு வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநரை இயலச் செய்யும் பயனைக் கொடுக்கும் வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநருக்கும் இடையில் பதிவு செய்யபட்ட எழுத்திலான உடன்படிக்கையொன்று:***

***(ii) தவறுகையிலுள்ள வாடிக்கையாளருடன் கலந்தாலோசனையில் அத்தகைய பங்குகளின் அடமானம் மட்டும் செய்யப்படுதல் வேண்டும்.***

***(iii) வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநரானவர் முறையான கவனத்துடன் மற்றும் ஆள்வினையுடைமையையும் பிரயோகித்தல் வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளரின் சிறந்த அக்கறையில் எப்போதும் செய்யப்படுதல் வேண்டும்.***

***(iv) அடமானமானது விதி 6.5 (ஆ) இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படுதல் வேண்டும்.***

ஈ) வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநரானவர் (திருத்தப்பட்டவாறான) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியுடன் அத்தகைய பிணையங்களை அடைமானம் வைக்கும் நோக்கத்துக்காக மாத்திரம் மேலேயுள்ள விதி 6.5(ஆ) மற்றும் விதி 6.5(இ) இல் வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநரின் குறித்துரைக்கபட்ட CDS கணக்குக்குக் கைமாற்றப்பட்ட பிணையங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

உ) CDS ஆனது உடனடியான வகையில் SEC க்கு இவ்விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கைமாற்றங்களையும் அறிக்கையிடுதல் வேண்டும்.

ஊ) பிணையங்களின் அடுத்துறும் விற்பனையிலிருந்து எழக்கூடிய ஏதேனும் இழப்பு மற்றும் இவ்விதிகளின் நியதிகளின் பிரகாரம் உறப்படும் செலவுகளும் செலவீனங்களும் தவறுகையிலுள்ள வாங்குபவரால் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்விதியின் நோக்கங்களுக்காக ''வாங்குபவரால் ஏற்படும் தவறுகை'' என்பது பிணையங்களின் கொள்வனவுக்காக இவ்விதிகளின் விதி 6.2இன் நியதிகளின் பிரகாரம் வாங்குகின்ற பங்குத் தரகர் பங்குபற்றுநர் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு வங்கிக்குக் கிடைக்கப் பெறச் செய்தல் வேண்டும்.

## 6.5 கொடுத்துத் தீர்த்தலில் தவறுகை

கொடுத்துத் தீர்த்தலில் தவறுகையை ஆளுகின்ற விதிகளானவை இவ்விதிகளின் பிரிவு 12 இல் தரப்பட்டுள்ளன.

பிரிவு 7

**பிணையங்களின் உருப்பொருள் நீக்கம் (பிணையங்களின் வைப்பு)**

**7.1 CDS இல் உள்ள பிணையங்களின் உருப்பொருளுக்கான நடவடிக்கை முறை**

அ) இவ்விதிகளுக்கமைய, கணக்கு வைத்திருப்பவர்கள் அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்கான கணக்குகளில் அத்தகைய பிணையச் சான்றிதழ்களை வைப்பிலிடுதல் அல்லது உரித்தின் சான்றைக் கட்டுப்பணமற்ற படிவத்தில் உள்ள அவர்களுடைய பிணையங்களை உருப்பொருள் நீக்கலாம். அத்தகைய வைப்புக்கள் இயைபான பங்குபற்றுநரினூடாகச் செய்யப்படுதல் வேண்டும்.

பங்குபற்றுநர்கள் வைப்புக்காக CDS இற்கு கையளிக்கப்பட்ட பிணையச் சான்றிதழ்கள் அல்லது உரித்துச்சான்று மற்றும் இயைபான CDS படிவம்/படிவங்கள் என்பவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதானது அவை பிரதியாக வைப்புக்கான பற்றுச் சீட்டுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பற்றுச் சீட்டின் பிரதியானது வைப்புக்கான பற்றுச் சீட்டைப் உறுதிப்படுத்துகின்றதான CDS இனால் பங்குபற்றுநருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பங்குபற்றுநர்கள் அவற்றைப் பெறுகின்ற மூன்று (03) சந்தை நாட்களினுள் இயைபான கணக்கு வைத்திருப்பாளருக்கு வைப்புச் சீட்டின் அத்தகைய பிரதியை அனுப்புதல் வேண்டும்.

ஆ) பங்குபற்றுநர்கள் கணக்கு வைத்திருப்பாளரினால் வாடிக்கையாளருடைய கணக்கினுள் வைப்பிலிடப்படுவதற்குப் பிணையங்களின் சான்றிதழ்கள் அல்லது உரித்தின் சான்று என்பன உறுதிப்படுத்தல் வேண்டுமென்பதுடன் அவை முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட, புறக்குறிப்பிடப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட இயைபான CDS படிவம்/படிவங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய படிவம்/படிவங்களில் தரப்பட்டுள்ள விபரங்களுக்கான எவையேனும் மாற்றங்களானவை கணக்கு வைத்திருப்பாளரினால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்டு பங்குபற்றுநரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

இ) CDS ஆனாது பிழையாகப் பூரணப்படுத்தப்பட்ட, புறக்குறிப்பிடப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் ஆவணத்தின்மீது செயலாற்றுவதற்கு கடப்பாடுடையதாதல் ஆகாது.

ஈ) வைப்புச் செய்வதற்காக அனுப்பப்பட்ட பிணையச் சான்றிதழ்கள் அல்லது உரித்துச் சான்றின் மீது சுட்டிக்காட்டப்பட்ட பிணையங்களின் தொகையானது இவ்விதிகளுக்கமைய CDS இனால் இயைபான வாடிக்கையாளருடைய கணக்கிற்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

உ) CDS இல் வாடிக்கையாளருடைய கணக்குக்கு வைப்புச் செய்யப்படுகின்ற பிணையங்களின் அத்தகைய தொகையின்மீது CDS ஆனது வைப்புத் தேதியன்று கம்பனியின் பங்கு இடாப்பில் CDS இன் பெயரிலுள்ள அத்தகைய பிணையங்களை பதிவு செய்யும் நோக்கத்துக்காக பிணையாளர்களின் அத்தகைய வைப்பு தொடர்பில் நிரற்படுத்தப்பட்ட உருவகமானது இயைபான கம்பனி செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். CDS இலிருந்து இயைபான ஆவணங்களின் சேகரிப்புக்கான ஏற்பாடுகளை செய்தல் கம்பனி செயலாளரின் பொறுப்புடைமையாதல் வேண்டும்.

ஊ) பிணையங்களின் சான்றிதழ், உரித்தின் சான்று உண்மையற்றதென நிரற்படுத்தப்பட்ட உருவகம் அபிப்பிராயப்பட்டிருப்பின் நிரற்படுத்தப்பட்ட உருவகம் முறையான அறிவித்தலை அத்தகைய மறுப்புக்கான காரணங்களுடன் இயைபான ஆவணங்களின் வைப்புத் தேதியிலிருந்து இரண்டு (02) சந்தை நாட்களினுள் நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பனி செயலாளரினால் CDS க்கு வழங்கப்படுதல் வேண்டும். கம்பனி செயலாளரிடமிருந்து அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் மீது CDS ஆனது ஏதேனும் சீராக்குவதற்கு தோதான படிமுறைகளை எடுப்பதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். பங்குபரிவர்த்தனையாளர் இது தொடர்பில் CDS இனால் தரப்படும் எவையேனும் அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதற்கு பிணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

எ) மேலே குறிப்பிட்ட காலப் பகுதியின் முடிவின் முன்னர் நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பனிச் செயலாளரிடமிருந்து CDS இனால் அத்தகைய அறிவித்தல் எதுவும் பெற்றுக்கொள்ளாதவிடத்து, CDS ஆனது கைமாற்றங்களானவை முறையே உள்ளது எனக் கருதப்படுதல் வேண்டும்.

ஏ) கம்பனி செயலாளரானவர், CDS க்கு எப்போது பிணையச் சான்றிதழ்/உரித்துச் சான்றின் ஏதேனும் தொலைந்துபோனமை பற்றி நிரற்படுத்திய உருவகத்திற்கு அறிக்கையிடப்பட்டபோது, பிணையச் சான்றிதழ்/உரித்துச் சான்றிதழ் மோசடியுள்ளமையை நிரற்படுத்தப்பட்ட உருவகம் கண்டுபிடித்தபோது அவரது கம்பனிச் செயலாளரால் (T) வலிதாக்கப்படாத பிணையங்கள்

சான்றிதழ்/உரித்துச்சான்றிதழ் செல்லுபடியற்றதாயுள்ளதெனக் கூறும்போது அதனை உடனடியாக CDS இற்கு அறிவித்தல் வேண்டும். பிணையச் சான்றிதழ்/உரித்துச் சான்று வலிதற்றதாக்கப்படும்போது CDS இற்கான அத்தகைய அறிவித்தலானது பங்கு வைத்திருப்பவரின் பெயர், சான்றிதழ் இலக்கம், பிணையங்களின் தொகை மற்றும் கம்பெனியின் பெயர் உள்ளடங்கலான பிணையச் சான்றிதழ்/உரித்துச் சான்று தொடர்பிலான விபரங்களானவை தரப்படுதல் வேண்டும்.

ஐ) CDS உடனான பிணையங்களின் வலிதற்ற வைப்பிலிருந்து எழுகின்ற எல்லாப் பொறுப்புடைமைகளும் பங்குபற்றுநரால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**7.2 பிணையங்களை வைப்பலிடும்போது பங்குபற்றுநரினால் ஏற்றுக் கொள்ளப்படும் நடவடிக்கை முறை**

அ) கணக்கு வைத்திருப்பாளரின் சார்பில் பிணையங்களை வைப்பிலிடும் பங்குபற்றுநர் வைப்புச் செய்வதற்கு முன்னரான பிணைச் சான்றிதழ்/சான்றிதழ்கள் அல்லது உரித்துச் சான்று மற்றும் ஏனைய ஆவணங்களின் உண்மைத்தன்மை/மெய்யுறுதித் தன்மை மற்றும் வலிதாந்தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். CDS ஆனது பிணையங்களின் வலிதற்ற வைப்பிலிருந்து எழுகின்ற ஏதேனும் இழப்பின் விளைவிற்குப் பொறுப்புடைமையாகாது.

ஆ) பிணையச் சான்றிதழ் அல்லது உரித்துச் சான்றின் உண்மைத் தன்மை தொடர்பில் ஏதேனும் சந்தேகத் தடயம் இருப்பின், பங்குபற்றுநர் நிரற்படுத்தப்பட்ட உருவாகத்தின் கம்பனி செயலாளருடன் ஒருங்கிணைதல் வேண்டும் என்பதுடன் பிணையச் சான்றிதழ் அல்லது உரித்துச் சான்று என்பவற்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். இம் முற்காப்புகள் CDS க்கு பிணையச்சான்றிதழை அல்லது உரித்துச் சான்றைக் கையளிப்பதற்கு முன்னர் எடுத்தல் வேண்டும்.

7.3 புதிய வழங்கல்கள் அல்லது மேலதிக வழங்கல்கள் தொடர்பில் வழங்கப்பட்ட பிணையங்களின் நேரடி வைப்பு (உரிமை தொடர்பான வழங்கல்கள் ஒதுக்கங்களின் மூலதனமயமாக்கலின் வழியினால் பூரணமாகச் செலுத்தப்பட்டதான வரவு வைக்கப்பட்ட பங்குகளை வழங்கல்)

இவ் விதிகளில் எது எவ்வாறிருப்பினும், CDS ஆனவை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளிடமிருந்து அத்துடன்/ அல்லது கணக்கு வைத்திருப்பாளர்கள் தொடர்பில்

அதன் சார்பில் வாடிக்கையாளருடைய கணக்குகளில் வைப்பலிடுவதற்காக அத்தகைய வேறு பிணையங்களின் வழங்குநர்களை ஏற்கலாம். CDS ஆனவை இயைபான பங்குபற்றுநர்களுக்கு அத்தகைய நேரடி வைப்பின் விபரங்களைக் குறித்துரைக்கும்.

## பிரிவு 8

**பிணையங்களின் உருப்பெருக்க ஆக்கம் (பிணையங்களை மீளப்பெறல்)**

8.1 இவ்விதிகளுக்கமைய, கணக்கு வைத்திருப்பவர் அவருடைய கணக்கில் பிணையங்களை அடகு வைப்பதற்கு எண்ணியிருப்பின் கணக்கு வைத்திருப்பவர் அத்தகைய பட்சத்தில் முழுமையாக அல்லது பகுதியளவொன்றில் அவருடைய கணக்கில் வைத்திருக்கும் எவையேனும் பிணையங்களை மீளப்பெறலாம் பிணையங்களை மீளப் பெறுவதற்கான ஏதேனும் வேண்டுகோளானது CDS இல் பேணப்படும் கணக்காளரினூடாக இயைபான பங்குபற்றுநரால் செய்யப்படுதல் வேண்டும்.

8.2 பங்குபற்றுநர்கள் கணக்கு வைத்திருப்பவரினால் பிணையங்களை உருப்பொருள் ஆக்கத்திற்கான வேண்டுகோளை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட, புறக்குறிப்பிடப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட CDS படிவம்/படிவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய படிவம்/படிவங்களில் தரப்பட்டுள்ள விபரங்களுக்கான எவையேனும் மாற்றங்கள் கணக்கு வைத்திருப்பவரினால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் பங்குபற்றுநரினால் அங்கீகாரமுடைய கையொப்பம் (counter sign) பண்ணப்படுதல் வேண்டும்.

8.3 பிணையங்களின் வலிதற்ற மீளப்பெறுதலிலிருந்து எழுகின்ற எல்லாப் பொறுப்புடைமைகளும் பங்குபற்றுநரால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

8.4 CDS இலிருந்து பிணையங்களின் மீளப்பெறலின் மீது CDS ஆனவை மீளப் பெறும் தேதியன்று கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் பிணையங்கள் சான்றிதழை வழங்கும் நோக்கத்திற்காக பிணையங்களின் அத்தகைய மீளப்பெறல் தொடர்பில் நிரப்படுத்தப்பட்ட உருவகத்தின் இயைபான கம்பனிச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். கம்பெனி செயலாளரின் பொறுப்புடைமையானது CDS இலிருந்து இயைபான ஆவணங்களின் சேகரிப்புக்கான ஒழுங்குகளைச் செய்வதாக இருத்தல் வேண்டும்.

8.5 கம்பெனி செயலாளர் CDS இலிருந்து இயைபான ஆவணங்களின் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 07 சந்தை நாட்களின் முடிவின் முன்னர் CDS இல் பிணையங்களின் மீளப்பெறல் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் வழங்கப்பட்ட பிணையங்கள் சான்றிதழை CDS க்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரிவு 9

## CDS இல் பிணையங்களைக் கைமாற்றுதல்

### 9.1 வாடிக்கையாளருடைய கணக்குத் தொடர்பில் பங்குபற்றுநரை மாற்றுதல்

#### அ) நடவடிக்கை முறை

i. இவ்விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கு வைத்திருப்பவர் ஒருவர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் வேறொரு பங்குபற்றுநருடன் பேணப்படும் அதே கணக்கு வைத்திருப்பவரின் மற்றொரு வாடிக்கையாளருடைய கணக்கிற்கு அத்தகைய வாடிக்கையாளருடைய கணக்கில் வைத்திருக்கும் பிணையங்களை வரவு வைக்கப்படுவதற்கு (ஏலவேயுள்ள பங்குபற்றுநர்) CDS களில் பேணப்படும் அவருடைய/அவளுடைய வாடிக்கையாளருடைய கணக்குள்ளவரான பங்குபற்றுநருக்கு அறிவுறுத்தலாம்.

ii. ஏலவேயுள்ள பங்குபற்றுநர் பின்வருவனவாதலன்றி பங்குபற்றுநரை மாற்றுவதற்கான அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்கு தாமதித்தல் அல்லது மறுத்தலாகாது.

- கணக்கு வைத்திருப்பவர் வாடிக்கையாளருடைய கணக்கில் வைத்திருக்கப்படும் பிணையங்களுக்காக கொடுப்பனவை மேற்கொள்ளாதவிடத்து; அல்லது

- பிணையங்கள் பங்குபற்றுநருக்கு அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு நிலுவையாகவுள்ள கொடுப்பனவுகளுக்காக சோந்தையின்கீழ் வைத்திருந்தாலன்றி

iii. பங்குபற்றுநரை மாற்றுவதற்கான அறிவுறுத்தல்கள் ஏலவேயுள்ள பங்குபற்றுநரினால் நிறைவேற்றப்பட முடியாதிருப்பின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பங்குபற்றுநருக்கு அத்தகைய அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டாம் சந்தைத் தேதியன்று அல்லது முன்னர் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

iv. பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பங்குபற்றுநர் தாமதம்/மறுப்புக்கு இட்டுச் செல்லும் காரணங்களுடன் திருப்திப்படாதுவிடின், அது CDS களின் அறிவுறுத்தல்களுக்குக் கொணரப்படுதல் வேண்டும். CDS ஆனது அத்தகைய தாமதம்/மறுப்புக்கான காரணங்களைக் கருத்திற்கொண்டு தோதான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

**ஆ) சரிபார்த்தல்**

வேண்டுகோளின் வசதிப்பாடு/மெய்மைத் தன்மையைப் பரிசோதிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் கணக்கு வைத்திருப்பவரின் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுதல் பங்குபற்றுநர்களின் பொறுப்புடைமையாதல் வேண்டும்.

## 9.2 தனிவேறான கணக்கு வைத்திருப்பவர்களினால் வைத்திருக்கப்படும் வாடிக்கையாளர் கணக்குகளுக்கிடையிலான பிணையங்களைக் கைமாற்றுதல்

SEC யின் முன்னரான எழுத்திலான முன்னங்கீகாரமானது, CSE யின் வியாபார நடவடிக்கை முறைக்கு அப்பால் ஒரு கணக்கு வைத்திருக்கும் வாடிக்காயளரிடமிருந்து மற்றுமொரு கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கு பிணையங்களைக் கைமாற்றும் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பங்குபற்றுநரினால் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

அத்தகைய எல்லா கைமாற்றமும், விண்ணப்பப் படிவங்கள் SEC யிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அங்கீகாரத்துக்கான மூலக் கடிதத்துடன் இணைத்து CDS க்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 9.3 2003இல் நிரலிலிருந்து நீக்கப்பட்டது/ திருத்தப்பட்டவாறான 1995ஆன் ஆண்டின் கம்பெனியைப் பொறுப்பேற்கும் மற்றும் இணைப்புக் கோவையின்கீழ் ஆக்கப்பட்ட முனைவு தொடர்பிலான பிணையங்களைக் கைமாற்றுதல்.

CDS ஆனது 2003 இல் திருத்தப்பட்டவாறான கம்பனி பொறுப்பேற்கும் மற்றும் இணைப்புக் கோவையின்கீழ் அல்லது நிரலிலிருந்து நீக்கப்படுவதன்கீழான முனைவு தொடர்பில் பிணையங்களைக் கைமாற்றுவது தொடர்பில் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதன் மீது முனைவாளரின் ஒதுக்கக் கணக்குக்கு அத்தகைய பிணையங்களைக் கைமாற்றுதல் வேண்டும். கொடுப்பனவினை உறுதிசெய்வதன்மீது

CDS ஆனது முனைவாளரின் வாடிக்கையாளருடைய கணக்குக்கு அத்தகைய பிணையங்களைக் கைமாற்றுதல் வேண்டும்.

**9.4 கணக்கு வைத்திருப்பவர் இறக்கும் பட்சத்தில் CDS இல் உள்ள பிணையங்களை மாற்றுதல்.**

கணக்கு வைத்திருப்பவர் இறக்கும் பட்சத்தில் CDS இல் அத்தகைய கணக்கு வைத்திருப்பவரால் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அவருடைய/அவளுடைய சட்ட வழியுரிமையாளர்களுக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

இந்நோக்கத்திற்காக அத்தகைய பிணையங்களை மாற்றுவதற்கான வேண்டுகோளானது இயைபான பங்குபற்றுநர்/பங்குபற்றுநர்களுக்கு ஊடாக விதித்துரைக்கப்பட்ட படிவம்/படிவங்களில் CDS க்கு செய்யப்படுதல் வேண்டும்.

பிரிவு 10

## உரித்துடைமைகள்

### 10.1 வாடிக்கையாளர் கணக்குகளுக்கான உரித்துடைமைகள்

அ) நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பனிச் செயலாளர் கீழேயுள்ள 10.6 விதிக்கமைய, CDS இனால் ஏற்பாடு செய்யப்பட்ட தகவலின் அடிப்படையின் மீது CDS இல் கணக்கு வைத்திருப்பவர்களின் உரித்துடைமைகளை செயல்முறைப்படுத்தல் வேண்டும்.

ஆ) பங்கிலாபத்தின் கொடுப்பனவு, ஒதுக்கங்கள் அல்லது உரிமைகளின் ஒதுக்கீடு அல்லது வேறு ஏதேனும் மூலதனம் என்ற வழிமூலம் பூரணமாக செலுத்தப்பட்டதான வரவு வைக்கப்பட்ட பங்குகளின் ஒதுக்கீடு என்பனவற்றின் கூட்டு செயற்பாடு ஒன்றிற்கு உரித்துடைய கணக்கு வைத்திருப்பவர், உரித்துடைய தேதியன்று அவருடைய/அவளுடைய வாடிக்கையாளர் கணக்கில் வைத்திருக்கும் பிணையங்களின் தொகையின் அடிப்படையின் மீது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

இ) எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி வசதியைப் பயன்படுத்தி கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் (CSE) தன்னியக்கமாக்கப்பட்ட வியாபார முறைமையின்மீது (ATS) நிறைவேற்றப்பட்ட ஒரு வியாபாரம் தொடர்பில் வாங்குனர்/வாங்குனர்கள் தவறுகைபுரியும் பட்சத்தில், நிரற்படுத்தப்பட்ட உருவகம், மத்திய வைப்பக முறைமையினால் (CDS) மதியுரையளிக்கப்பட்டவாறு, அத்தகைய எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) வியாபாரத்தைப் பின்பற்றி மத்திய வைப்பக முறைமையிலுள்ள (CDS) வாங்குனரின்/ வாங்குனர்களின்/ கணக்குக்கு/ கணக்குகளுக்குத் திரளுகின்ற கூட்டிணைப்பு உரித்துடைமையைச் செய்முறைப்படுத்துதல் வேண்டும்.

### 10.2 பங்கிலாபங்கள்

அ) பங்கிலாபத்தை வெளிப்படுத்துகின்ற நிரற்படுத்தப்பட்ட உருவகம் ஒன்றின் விடயத்தில் CDS ஆனது உரித்துடைமை தேதியிலுள்ளவாறு அப்பிணையம் தொடர்பில் இயைபான அவர்களுடைய பங்குகளை கணக்கு

வைத்திருப்பவர்களின் பட்டியல் ஒன்றினை நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பனிச் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ) பணரீதியான பங்குலாபம் என்னும் விடயத்தில், நிரற்படுத்தப்பட்ட உருவகமானது இயைபான கணக்கு வைத்திருப்பாளர்களுக்கு நேரடியாக பங்கிலாபக் கொடுப்பனவுகளை அனுப்புதல் வேண்டும்.

இ) கட்டுப்பணமற்ற பங்கிலாபம் என்னும் விடயத்தில் ஒதுக்கப்பட்ட பங்குகளானவை CDS க்கு கம்பனி செயலாளரினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய இயைபான வாடிக்கையாளருடைய கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

**10.3 ஒதுக்கங்களை மூலதனமாக்கல் தன்மை என்ற வழிவகையின் மூலம் பூரணமாக செலுத்தப்பட்டதான வரவுவைக்கப்பட்ட பங்குகளை வழங்கல்**

ஒதுக்கங்களை மூலதனமாக்கல் தன்மை என்ற வழிவகை மூலம் பூரணமாகச் செலுத்தப்பட்டதான வரவு வைக்கப்பட்ட பங்குகளை வழங்கும் நிரற்படுத்தப்பட்ட உருவகம் என்னும் விடயத்தில் CDS ஆனது உரித்து/பங்கீட்டுத் தேதியன்றுள்ளவாறான அப்பிணையம் தொடர்பில் அவர்களுடைய இயைபான பங்குவைத்திருக்கையுடனான கணக்கு வைத்திருப்பவர்களின் நிரல் ஒன்றை நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பனி செயலாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

பங்கீடு செய்யப்பட்ட பங்குகள் CDS க்கு கம்பனி செயலாளரினால் ஏற்பாடு செய்யப்பட்ட தகவலுக்கமைய இயைபான வாடிக்கையாளருடைய கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

**10.4 உரிமைப் பங்கு வழங்கல்கள்**

அ) உரிமைப் பங்கு வழங்கும் நிரற்படுத்தப்பட்ட உருவகம் ஒன்றின் விடயத்தில் CDS ஆனது உரித்துடைமை தேதியன்றுள்ளவாறு அப் பிணையம் தொடர்பில் அவர்களுடைய இயைபான பங்குவைத்திருக்கைகளுடன் கணக்கு வைத்திருப்பவர்களின் நிரல் ஒன்றை நிரற்படுத்தப்பட்ட உருவகம் ஒன்றின் கம்பனிச் செயலாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

ஆ) நிரற்படுத்தப்பட்ட உருவகமானது கீழேயுள்ள விதி 10.6 இற்கு அமைவாக CDS இனால் ஏற்பாடு செய்யப்பட்ட தகவலுக்கு அமைய இயைபான கணக்கு

வைத்திருப்பவர்களுக்கு நேரடியாகப் பங்கீடு பற்றிய தற்காலிக கடிதங்களை தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இ) கணக்கு வைத்திருப்பவர் ஒருவர் பங்குப் பரிவர்த்ததனையாளரூடாக CDS க்கு வழங்கும் உரிமைகளிலிருந்து எழுகின்ற அவருடைய உரிமைகளின் தற்காலிக பங்கீட்டைத் துறக்கலாம். இந்நோக்கத்துக்காக முறையாகவும் பூரணமாகவுள்ளதுமான பங்கீடுகளின் தற்காலிகக் கடிதம் அவருடைய பங்குபற்றுநர் ஊடாக கணக்கு வைத்திருப்பவரினால் இயைபான வாடிக்கையாளருடைய கணக்கில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் பங்குபற்றுநரூடாக அத்தகைய உரிமைகளை வியாபாரமயமாக்கலாம். அத்தகைய வைப்புக்களை மற்றும் உரிமைகளிலான வியாபாரமாக்கல் (Trade) என்பன உரிமைப் பங்கு வழங்கலின் துறத்தலுக்கான காலப்பகுதியின் போது அனுமதிக்கப்படலாம்.

ஈ) CDS ஆனது துறத்தலுக்கான இறுதித் தேதியன்று உரிமைகளை அவர்களுக்குரிய பங்கீடுகளுடனான அத்தகைய பங்குபற்றுநரூடாக CDS இல் உரிமைகளை வைத்திருக்கின்றவரான கணக்கு வைத்திருப்பவர்களின் நிரலொன்றை பங்குபற்றுநர்களுக்கு சமர்பித்தல் வேண்டும். பங்குபற்றுநர்கள் உரிமைகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தேதியன்று 10.30 மணியளவில் CDS க்கு கணக்கு வைத்திருப்பவர்களினால் செலுத்தப்பட்ட உரிமைப் பங்குகள் தொடர்பில் கொடுப்பனவுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் இயைபான நிரற்படுத்தப்பட்ட உருவகத்திற்கு CDS இனால் முறையே அனுப்புதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர்களினால் செலுத்தப்படாத எவையேனும் உரிமைகள் விபரங்கள் உரிமைகளின் ஏற்பின் இறுதித் தேதியன்று 10.30 மணியளவில் CDS க்கு முறையான பங்குபற்றுநர்களினால் அறிவிக்கப்படுதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பாளர்களினால் செலுத்தப்படாத அத்தகைய உரிமைகளானவை CDS இனால் முறையாக மீளப்பெறப்படும்.

உ) CDS இல் கணக்கு வைத்திருப்பவர்களினால் முறையாகச் செலுத்தப்பட்ட எவையேனும் உரிமைகள், உரிமை விடயங்கள் தொடர்பில் CSE இன் மீது அத்தகைய பங்குகளின் நிரல் மீது நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பெனி செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய பங்குகளுக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

**10.5 வியாபார நாளிற்கும் கொடுத்துத் தீர்க்கும் நாளிற்கும் இடையில் கணக்கு வைத்திருப்பவர்களுக்குச் சேர்க்கப்பட்ட உரிமைகள் அல்லது பங்கிலாபங்களின் விடயத்திலும் அத்தகைய கணக்கு வைத்திருப்பவர் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீதான கொடுப்பனவைத் தவறும்போது பங்குபற்றுநரானவர் பின்வருவனவற்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.**

அ) தற்காலிக பங்கீட்டு கடிதத்தினை அனுப்பும் தேதிக்கு முன்னர் ஐந்து (05) சந்தைப்படுத்தல் நாளை விஞ்சாததும் மற்றும் தற்காலிக பங்கீட்டு ஏற்பாட்டுத் தேதி தவிர்ந்த (உரிமை வழங்கலொன்றின் பட்சத்தில்) அல்லது கொடுப்பனவு தேதியில் CDS இனை பங்குபற்றுநரின் சார்பில் அத்தகைய உரித்துடைமையை கைமாற்றுவதற்கு எழுத்தில் கோருகின்றது.

ஆ) CDS இன் அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதன் மீது CDS ஆனது பங்குபற்றுநரின் சார்பில் (உரிமைகள் அல்லது பங்கிலாபம்) உரித்துடைமையை வழங்குவதற்கு இயைபான நிரற்படுத்தப்பட்ட உருவகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

10.6 CDS இனால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள்/தகவலிலிருந்து அத்தகைய வேறுபாட்டுக்கான காரணங்களை வழங்கும் நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பனி செயலாளரின் திருப்திக்கு கணக்கு வைத்திருப்பாளரினால் போதுமானளவு எண்பிப்பு சமர்ப்பிக்கப்படுமாயின், நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் கம்பனிச் செயலாளர் அவருடைய/அவளுடைய/அதனது தற்துணிபிலும் அவருடைய/அவளுடைய/அதனது சொந்த இடரிலும் முகவரியுடன் தொடர்புடைய CDS இனால் அல்லது கூட்டு நன்மைக்கு உரித்துடையவரான கணக்கு வைத்திருப்பவரின் பங்கிலாபக் கொடுப்பனவிற்கான அறிவுறுத்தல்கள் என்பனவற்றால் வழங்கப்பட்ட தகவலிலிருந்து வேறுபடுத்தலாம்.

பிரிவு 11

## CDS கணக்கு கூற்றுக்கள்

### 11.1 கால ஒழுங்கு முறையிலான CDS கணக்கு கூற்றுக்கள்

CDS ஆனது பின்வருவன உள்ளடங்கலான CDS கணக்கு கூற்றொன்றை கணக்கு வைத்திருப்பவருக்கு அனுப்புதல் வேண்டும்.

அ) கணக்கு வைத்திருப்பவரினால் வைத்திருக்கப்படும் எல்லா நிரற்படுத்தப்பட்ட பிணைங்கள்/அத்துடன்

ஆ) அத்தகைய வாடிக்கையாளருடைய கணக்கில் உள்ள அத்தகைய நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் தொகை.

CDS கணக்கு கூற்றானது, CDS இனால் நேரடியாக கணக்கு வைத்திருப்பவருக்கு அனுப்பப்படும். வாடிக்கையாளருடைய கணக்கானது நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினூடாக பேணப்படுமிடத்து, இக்கூற்றானது CDS இன் சார்பில் பேணப்படும் வாடிக்கையாளரின் கணக்கினூடாக இயைபான நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினூடாக கணக்கு வைத்திருப்பவருக்கு இக் கூற்றானது அனுபப்படும்.

CDS கணக்கு கூற்றுக்களானவை இயைபான பங்குபற்றுநரூடாக கணக்கு வைத்திருப்பவரினால் ஏற்பாடு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு இலத்திரனியல் படிவத்தில் அனுபப்படலாம். பங்குபற்றுநர்கள் மின்னஞ்சல் முகவரிகளை இயைபான CDS கணக்கு வைத்திருப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதென்பதை CDS உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

கணக்கு வைத்திருப்பவர், இயைபான பங்குபற்றுநரூடாக எழுத்தில் வேண்டும் பட்சத்தில், CDS ஆனது அத்தகைய கணக்கு வைத்திருப்பவருக்கு அச்சிடப்பட்ட படிவத்தில் CDS கூற்றுக்களை அனுப்புதல் வேண்டும்.

CDS கணக்குக் கூற்றுக்களை வழங்கும் நிகழ்வு பின்வருமாறு வழங்கப்படுதல் வேண்டும் :

அ) CDS ஆனது குறித்த மாதத்தின்போது அத்தகைய கணக்கு செயற்பாட்டு நிலையில் இருப்பின் மாதாந்தக் கூற்றினை கணக்கு வைத்திருப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். (மாதாந்தக் கூற்று)

ஆ) CDS ஆனது முற்போந்த மூன்று மாதங்களின் போது அத்தகைய கணக்கு செயற்பாட்டு நிலையில் இருப்பின், காலாண்டுக் கூற்றொன்று கணக்கு வைத்திருப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

மேலே உள்ள விதி (அ) மற்றும் (ஆ) வின் நோக்கங்களுக்காக, 'செயற்பாட்டு நிலையிலுள்ள கணக்கு' மேலே குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் போது (கொள்வனவு/விற்பனை/ வைப்பு/மீளப்பெறுதல்/கைமாற்றம்) ஆகக் குறைந்த ஒரு கொடுக்கல் வாங்கலுடனான கணக்கொன்றாக இருத்தல் வேண்டும்.

இ) CDS ஆனது கடன் நிலுவைகளைக்கொண்டுள்ள (12 மாதங்களுக்கான கொடுக்கல் வாங்கல்கள் இன்றிய கணக்குகளுடன்) செயற்பாடற்ற கணக்கு வைத்திருப்பாளர்களுக்கு 31, மார்ச் அன்றுள்ளவாறு ஆண்டு தோறும் கூற்றொன்றை அனுப்புதல் வேண்டும்.

## 11.2 திருப்பியனுப்பப்பட்ட CDS கணக்குக் கூற்றுக்கள்

### (அ) இலத்திரனியல் படிவத்தில் அனுப்பப்படும் CDS கணக்குக் கூற்றுக்கள்

CDS உடன் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பபட்ட CDS கணக்குக் கூற்று CDS க்கு திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அல்லது அத்தகைய கணக்கு வைத்திருப்பாளரால் பெற்றுக்கொள்ளப்படாத CDS கணக்குக் கூற்று எழுத்தில் CDS க்கு கணக்கு வைத்திருப்பாளர் அறிவிக்குமிடத்து, CDS ஆனது கூற்றானது அனுப்பப்படும் கணக்கு வைத்திருப்பாளரிடமிருந்து மின்னஞ்சல் முகவரியை மாற்றுவதற்கு எழுத்தில் பெறுவதற்கு உரிய பங்குபற்றுநரை தேவைப்படுத்துதல் வேண்டும். பங்கு பரிவரத்தனையாளர் அத்தகைய வேண்டுகோளை ஒரு கிழமையினுள் இதனகத்துள் தரப்பட்டுள்ள CDS க்கு மாற்றீடான மின்னஞ்சல் முகவரியொன்றை சமர்ப்பிக்காதவிடத்து CDS ஆனது CDS உடன் பதிவு

செய்யப்பட்ட தபால் முகவரிக்கு அச்சிடப்பட்ட படிவத்தில் CDS கணக்குக் கூற்றினை அனுப்புதல் வேண்டும்.

**(ஆ) CDS கணக்குக் கூற்றுக்களை அச்சிடப்படப்பட்ட படிவத்தில் அனுப்புதல்**

CDS உடன் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படும் கூற்றொன்று CDS இற்கு திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் CDS ஆனது கூற்று அனுப்பப்படவேண்டிய முகவரியை கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து மாற்றீடான முகவரியொன்றான எழுத்தில் பெற்றுக்கொள்வதற்கு இயைபான பங்குபற்றுநரை தேவைப்படுத்தல் வேண்டும். பங்குபற்றுநர் அத்தகைய வேண்டுகோளில் இரண்டு கிழமைகளினுள் இதனகத்துள் தரப்பட்டுள்ளதான மாற்றீடான முகவரியொன்றை CDS இற்கு சமர்ப்பிக்காத பட்சத்தில் CDS ஆனது இயைபான வாடிக்கையாளருடனான வியாபாரத் தொடர்புகளை இடைநிறுத்தல் வேண்டும். CDS ஆனது கணக்குவைத்திருப்பவரின் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு CDS இன் கணக்குக் கூற்றுக்களை இதன்பின்னர் அனுப்புதலாகாது. அத்தகைய காலம் மட்டும் கணக்குவைத்திருப்பவர் இயைபான பங்குபற்றுநரினூடாக கணக்கு வைத்திருப்பவருடைய இதன்பின்னர் பதிவுசெய்யப்பட்ட முகவரியை எழுத்தில் மாற்றீடான முகவரியொன்றாக CDS இற்கு அறிவிப்பார். கணக்கு வைத்திருப்பாளர் கூற்றுக்களானவை அனுப்பப்படவேண்டிய முகவரியொன்றை அறிவித்தலின்மீது, CDS ஆனது இயைபான வாடிக்கையாளரின் கணக்கு பற்றிய கொடுக்கல் வாங்கலின் இடைநிறுத்துகையை அகற்றுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் CDS ஆனது பங்குத் தரகரின் வேண்டுகோளின்மீது பங்குபற்றுநரினால் ஆக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து பங்குத் தரகரான பங்குபற்றுநருடைய உரிமைகள் பற்றிய மட்டுப்பாடொன்றை தோற்றுவிக்கும் இடைநிறுத்துகையானது தொடருமிடத்து இவ்விதியின் நியதிகளின்படி விதிக்கப்பட்ட வாடிக்கையாளர் கணக்கொன்றின் இடைநிறுத்துகையை அகற்றலாம்.

இடைநிறுத்துகையை அகற்றுதலுக்கு முன்னர், CDS ஆனது பின்வருமாறு தரப்பட்டுள்ளதன்படி பங்குத் தரகரான பங்குபற்றுநரின் பிரதான நிறைவேற்று அலுவலரிடமிருந்து சத்தியக் கடதாசி ஒன்றைப் பெறுதல் வேண்டும்:

- பங்குத் தரகரான பங்குபற்றுநர் CDS இன் கணக்கை திறக்கும் நேரத்தில் உள்ள தேவைப்பாடான "உங்களுடைய வாடிக்கையாளரைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்" என்பதனுடன் இணங்கியொழுகுவதற்கான நியாயமான வழிமுறைகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

- கணக்கு வைத்திருப்பாளர் பங்குத் தரகரான பங்கு பரிவர்த்தனையாருக்கு கடப்பாடுடையவராக இருத்தல் வேண்டும்.

- பங்குத் தரகரான பங்குபற்றுநர் CDS க்கு மற்றும்/அல்லது கணக்கு வைத்திருப்பவரால் ஆக்கப்படும் கோரிக்கையாக இருக்கும் பட்சத்தில், ஏதேனும் வெளிப்பாட்டுக்கு எதிராக CSE இற்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கு பொறுப்பு முயற்சியெடுத்தல் வேண்டும்.

- அத்துடன் பங்குத் தரகர் பங்குபற்றுநரானவர் அவரால் எடுக்கப்பட்ட பின்வரும் நடவடிக்கைமுறைகள் உள்ளடங்கலான கணக்கு வைத்திருப்பாளரை தேடுவதற்கான போதுமானளவு முயற்சிகளை எடுத்துள்ளார்:

1. பங்குத் தரகர் பங்குபற்றுநர் ஒலிமூல தொடர்பாடல் அத்துடன்/அல்லது மின்னஞ்சல் ஊடாக கணக்கு வைத்திருப்பவரை தொடர்புகொள்ள முயற்சிகளை எடுத்துள்ளார். (மின்னஞ்சல் மூலமான தொடர்பாடல் பற்றிய எண்பிப்பானது சத்தியக் கடதாசியுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.)

2. பங்குத் தரகர் பங்குபற்றுநர் CDS இன் கணக்குக் கூற்று திருப்பியனுப்பப்படுதல் தொடர்பில் CDS உடன் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் கணக்கு வைத்திருப்பாளருக்கு தொடர்பாடலொன்றை அனுப்பியுள்ளார். (பதிவுத் தபால் மூலமான தொடர்பாடலுக்கான எண்பிப்பானது சத்தியக் கடதாசியுடன் இணைக்கப்படுதல் வேண்டும்)

3. கணக்கு வைத்திருப்பவரைத் தேடுவதற்கு பங்குத் தரகர் பங்குபற்றுநரால் எடுக்கப்பட்ட வேறு ஏனைய படிமுறைகள் ( ஏற்புடைமையாகுமிடத்து)

### 11.3 CDS இன் கணக்குக் கூற்றுக்களின் பிரதிகள்

கணக்கு வைத்திருப்பாளர் CDS இன் கணக்கு கூற்றின் அச்சிடப்பட்ட பிரதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு விரும்பின், கணக்கு வைத்திருப்பவர், ஒன்றில் இயைபான பங்குபற்றுநரினூடாக அல்லது CDS இன் அலுவலகத்திற்கு தனிப்பட்ட முறையில் அழைப்பை மேற்கொண்டு வேண்டுகோள் விடுக்கலாம் என்பதுடன் அவருடைய/அவளுடைய அடையாளத்தை நிரூபிப்பதன் மீது அத்தகைய கூற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு மாற்றீடாக கணக்கு வைத்திருப்பவர், CDS இன் கணக்குக் கூற்றின் பிரதியொன்றுக்காக வேண்டுகோள் விடுத்து, CDS க்கு எழுத முடியும். CDS ஆனது கணக்கு வைத்திருப்பவரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதான CDS உடன் பதிவு செய்யப்பட்ட தபால் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அத்தகைய CDS இன் கணக்குக் கூற்றை அனுப்புதல் வேண்டும்.

CDS ஆனது CDS இன் கணக்குக் கூற்றுக்களின் அச்சிடப்பட்ட பிரதிகளை வழங்குவதற்காக கணக்கு வைத்திருப்பாளர்களிடமிருந்து கட்டணமொன்றை அறவிடலாம்.

பிரிவு 12

## பங்குபற்றுநர்களுக்கு இடையேயான தீர்ப்பனவுத் தவறுகையை ஆளுகின்ற விதிகள்

### 12.1 பங்குத் தரகர் பங்குபற்றுநரின் தீர்ப்பனவுத் தவறுகை

CDS ஆனது பங்குத் தரகர் பங்குபற்றுநரொருவரின் கொடுத்துத் தீர்த்தல் தவறுகை ஒன்று தொடர்பில் பின்வரும் நடவடிக்கை முறையை அமுல்படுத்த வேண்டும்:

i. பங்குத் தரகர் பங்குபற்றுநரொவரினால் கொடுத்துத் தீர்த்தல் தவறுகை ஒன்று இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய பங்குபற்றுநர் அதன் வாடிக்கையாளர்கள் சார்பில் மேலதிக கொள்வனவுகளை ஆக்குவதிலிருந்து உடனடியாக இடை நிறுத்தப்படுதல் வேண்டும்.

ii. CDS ஆனது பங்குத் தரகர் பங்குபற்றுநரின் கொடுத்துத் தீர்த்தல் தவறுகை பற்றி இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் பத்திரிகைகளில் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

iii. தவறுகையிலுள்ள பங்குத் தரகர் பங்குபற்றுநர் அத்தகைய இடைநிறுத்தத் தேதியிலிருந்து 15ஆம் நாள்வரை அதன் வாடிக்கையாளர்களின் சார்பில் பிணையங்களின் விற்பனையை நிறைவேற்றுதலை தொடருவதற்கு அனுமதிக்கப்படலாம்.

iv. பங்குத் தரகர் பங்குபற்றுநர் கொள்வனவுகளை நிறைவேற்றுவதிலிருந்து இடைநிறுத்தப்பட்ட தேதியிலிருந்து பதினைந்தாவது (15வது) சந்தை நாளின் காலாவதியாவதன்மூலம் நிலுவையிலுள்ள கொடுத்துத் தீர்க்கும் கடப்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குத் தவறுகின்றவராயின், அத்தகைய பங்குபற்றுநர் மேலே சொல்லப்பட்டவாறான 15வது சந்தை நாட்களின் முடிவிலிருந்து பயனுறும் வகையில் அதன் வாடிக்கையாளர்களின் சார்பில் விற்பனைகளை நிறைவேற்றுவதிலிருந்து இடைநிறுத்தப்படும்.

v. இதனகத்துள் குறிப்பீடு செய்யப்படும் இடைநிறுத்தல்கள் எவ்வாறிருப்பினும், தவறுகையிலுள்ள பங்குத் தரகர் பங்குபற்றுநர் ஏனைய பங்குபற்றுநர்களுக்கு நிதியினைக் கொடுத்தத் தீர்த்தல் தொடர்பில் அதன் கடப்பாடுகளுக்கு மதிப்பளிப்பதனை தொடருதல் வேண்டும்.

vi. தவறுகையிலுள்ள பங்குத் தரகரான பங்குபற்றுநர் அத்தகைய பங்குபற்றுநரால் பெறப்பட்ட எல்லா விற்பனை நடவடிக்கை முறைகளையும் இயைபான விற்பனையாளர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

vii. தவறுகையிலுள்ள பங்குத் தரகர் பங்குபற்றுநருடன் பிணையங்களை வைத்திருக்கின்ற கணக்கு வைத்திருப்பவர்கள் அவர்களுடைய தெரிவில் வேறு எவரேனும் பங்குபற்றுநருக்கு தவறுகையிலுள்ள அத்தகைய பங்குபற்றுநரிடமிருந்து மாற்றலாம். கணக்கு வைத்திருப்பவர்கள் எவையேனும் நிலுவையிலுள்ள கடப்பாடுகளின் இணக்கத்தின் பின்னர் மட்டும் அவ்வாறு செய்யலாம். CDS இல் பங்குபற்றுநரை மாற்றுதலானது விதிகளின் விதி 9.1 இன் நியதிகளின் பிரகாரம் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

viii. தவறுகையிலுள்ள பங்குத் தரகர் பங்குபற்றுநர் கொடுத்துத் தீர்த்தல் உத்தரவாத நிதியினால் (SGF) விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய கொடுத்துத் தீர்த்தல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு SGF நிதியைப் பெறலாம்.

**12.2 நம்பிக்கைப்பொறுப்பு வங்கியொன்றின் கொடுத்துத் தீர்த்தல் தவறுகை**

CDS ஆனது நம்பிக்கைப்பொறுப்பு வங்கியொன்றின் கொடுத்துத் தீர்த்தல் தவறுகை தொடர்பில் பின்வரும் நடவடிக்கை முறையை அமுல்படுத்தல் வேண்டும்:

(அ) நம்பிக்கைப்பொறுப்பு பங்குபற்றுநரின் கொடுத்துத் தீர்த்தல் தவறுகையொன்றின் விடயத்தில் அத்தகைய பங்குபற்றுநர் எவையேனும் CDS பணிகளை நிறைவேற்றுவதிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்படும்.

(ஆ) CDS ஆனது நம்பிக்கைப்பொறுப்பு வங்கியின் கொடுத்துத் தீர்த்தல் தவறுகையை இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆங்கில, சிங்களம், மற்றும் தமிழ் மொழி பத்திரிகைகளில் அறிவித்தல் ஒன்றை வெளியிடுதல் வேண்டும்.

(இ) இதன்கண் குறிப்பீடு செய்யப்படும் இடைநிறுத்தல் எவ்வாறிருப்பினும், நம்பிக்கைப்பொறுப்பு வங்கி ஏனைய பங்குபற்றுநர்களுக்கு நிதியை கொடுத்துத் தீர்த்தல் தொடர்பில் அதன் கடப்பாடுகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

(ஈ) தவறுகையிலுள்ள நம்பிக்கைப்பொறுப்பு வங்கியுடன் பிணையங்களை வைத்திருக்கின்றவரான கணக்கு வைத்திருப்பவர்கள் அவர்களுடைய தெரிவின் வேறு எவரேனும் பங்குபற்றுநருக்கு தவறுகையிலுள்ள நம்பிக்கைப்பொறுப்பு வங்கியிடமிருந்து மாற்றலாம். கணக்கு வைத்திருப்பவர்கள் எவையேனும் நிலுவையிலுள்ள கடப்பாடுகளை கொடுத்துத் தீர்த்த பின்னர் மட்டுமே அவ்வாறு செய்யலாம். CDS இல் பங்குபற்றுநரை மாற்றுதலானது விதிகளின் 9.1 விதியின் நியதிகளின்படி நிறைவேற்றப்படும்.

**பிரிவு 13**

**பொது**

**13.1 CDS தகவலை விடுவித்தல்**

(அ) வாடிக்கையாளருடைய கணக்கொன்று தொடர்பிலான தகவல்

CDS ஆனது வாடிக்கையாளருடைய கணக்கு தொடர்பில் தகவலை பின்வரும் சந்தர்ப்பங்களில் விடுவித்தல் வேண்டும்.

(i) இயைபான பங்குபற்றுநரினால் ஆக்கப்படுகின்ற எழுத்து மூல வேண்டுகோளின் மீது

(ii) கணக்கு வைத்திருப்பவரால் ஆக்கப்படுகின்ற எழுத்து மூல வேண்டுகோளின் மீது (அத்தகைய அறிவித்தலானது அத்தகைய கணக்கு வைத்திருப்பாளரின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு/மின்னஞ்சல் முகவரிக்கு/ தொலைபேசி இலக்கம் அல்லது முறையான அடையாளங்களை உறுதிப்படுத்துவதன்மீது கணக்கு வைத்திருப்பாளருக்கு கையளிக்கப்படும்)

(iii) இயைபான கம்பனி செயலாளரினால் ஆக்கப்படுகின்ற எழுத்துமூல வேண்டுகோளின் மீது

(iv) ஏதேனும் ஏற்புடையற்பாலதான சட்டத்தால் அல்லது நீதிமன்றக் கட்டளையால் தேவையேற்படுத்தப்படின்

(v) SEC இனால் ஆக்கப்படுகின்ற எழுத்து மூல வேண்டுகோளின் மீது

(vi) இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு அலகினால் ஆக்கப்படும் எழுத்து மூல வேண்டுகோளின் மீது (FIU)

(ஆ) நிதிகளைக் கொடுத்துத்தீர்த்தல் தொடர்பிலான தகவல்

CDS ஆனது இவ்விதிகளின் பிரிவு 6 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறான CDS இன் கொடுத்து தீர்க்கும் வங்கி/வங்கிகளுக்கு நிதியங்களின் கொடுத்து தீர்த்தல் தொடர்பில் தகவலை வெளியிடுதல் வேண்டும்.

**13.2 CDS இனால் சட்ட நடவடிக்கை**

இவ்விதிகளின் பிரகாரம், குறித்த சட்ட நடவடிக்கை தொடர்பாக, பணிப்பாளர் சபை குறிப்பாகத் தேவைப்படுமிடத்து தவிர சபையின் தவிசாளர் அல்லது CDS இன் முகாமையாளர் அல்லது காலத்துக்குக் காலம் பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் CDS இன் சார்பில் செயற்படுதல் வேண்டும்.

13.3 இவ் விதிகளுடன் தொடர்புபட்ட அல்லது இவ்விதிகளின் நோக்கத்துக்காக நல்லெண்ணத்துடன் CDS இனால் நிறைவேற்றப்பட்ட அல்லது நிறைவேற்றப்படுவதற்கு தவிர்க்கப்பட்ட செயலெதுவும் பின்வருவன உள்ளடங்கலாக CDS இன் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் 1997ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, நியாயமற்ற ஒப்பந்த நியதிகளினால் தரப்பட்டுள்ளதான விரிவாக்கம் தவிர, தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ பொறுப்பற்றவராதல் வேண்டும்.

(i) CDS இன் பணிப்பாளர்கள் சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அத்தகைய சபையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் எவரேனும் உறுப்பினர்

(ii) CDS இன் பணிகளை நிறைவேற்றுவதற்கு குறித்தொதுக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அத்துடன்

(iii) CDS இன் பணிப்பின்கீழ் செயலாற்றும் எவரேனும் முகவர், அல்லது எவரேனும் ஆள்.

13.4 இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத CDS உடன் தொடர்புடைய அல்லது அது தொடர்பில் எழுகின்ற ஏதேனும் விடயத்தின் நிகழ்வில், CDS ஆனது அத்தகைய விடயம் தீர்மானிப்பதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். இவ்விதியின் நியதிகளின்படி CDS இனால் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்மானமானது எல்லாத் திறத்தவர்மீது பிணிக்கப்பட்டவராதல் வேண்டும்.

**13.5 இவ்விதிகளுக்கான திருத்தங்கள்**

SECஇன் அங்கீகாரத்திற்கு அமைய, CDS ஆனது காலத்திற்குக்காலம் இவ்விதிகளின் ஏற்பாடுகளைத் திருத்தலாம். அத்தகைய திருத்தங்கள் CDS தீர்மானிக்கக்கூடியவாறு

உடனடி விளைவுடன் அல்லது வேறு வகையில் ஆக்கப்படலாம். CDS ஆனது அத்தகைய திருத்தங்களை எழுத்தில் பங்குபற்றுநருக்கு அறிவித்தல் வேண்டும்.

### 13.6 படிவங்கள்

இவ்விதிகளின் நியதிகளின்படி CDS இன் வசதிகளை நிறைவேற்றுவதில் தொடர்புபட்ட CDS இனால் வழங்கப்பட்ட அத்துடன் / அல்லது விதித்துரைக்கப்பட்ட எல்லாப் படிவங்களும் வேறு ஆவணங்களும் CDS இன் பூரண தற்துணிபின்படி சேர்த்தல்கள், நீக்கங்கள், விலக்களிப்புகள் மூலம் காலத்துக்குக் காலம் வேறுபடுத்தப்படலாம்.

### 13.7 CDS இற்கு செலுத்தப்படற்பாலதான சேவைக் கட்டணங்கள்

CDS ஆனது கணக்கு வைத்திருப்பவர்கள், நிரற்படுத்தப்பட்ட உருவகம், பங்கு பற்றுநர்கள் அல்லது வேறு எவரேனும் வாடிக்கையாளர் என்பனவற்றுக்கு CDS இனால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக காலத்துக்குக் காலம் CDS இனால் தீர்மானிக்கப்பட்டதான கட்டணத்தை அறவிடலாம்.

அத்தகைய கட்டணத்திலுள்ள ஏதேனும் மாற்றமானது சுற்றறிக்கை படிவங்களில் CDS இனால் பங்குபற்றுநருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

### 13.8 CDS இன் வளவுகளுக்கான அனுமதி

ஆளெவரும் முகாமையாளரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி அல்லது அவருக்காக செயற்படுவதற்கு நியமிக்கப்படும் அலுவலரது அங்கீகாரமின்றி CDS இன் வளவுகளுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

பிரிவு : 14

**பங்குபற்றுநரின் நிதிப் பொறுப்பும், தொழிற்பாட்டு ஆற்றலும்**

14.1 CDS பங்குபற்றுநர் மத்தியில் அவசியமானதென அல்லது தோதானதெனக் கருதுகின்றவாறு நிதிப்பொறுப்பு, தொழிற்பாட்டு ஆற்றல், அனுபவம் மற்றும் தேர்ச்சி என்பவற்றுக்கான நியமங்களை ஏற்படுத்தலாம். CDS பங்குபற்றுநராக அங்கீகரிக்கப்படுவதற்கான வழிகாட்டல்களையும் ஏற்படுத்தலாம். CDS எவராவது பங்குபற்றுநர் அல்லது பங்குபற்றுநராக வர எண்ணும் விண்ணப்பதாரியின் நிதிப்பொறுப்பு மற்றும் தொழிற்பாட்டு ஆற்றலைப் பரீட்சிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும். இத்தகைய பரீட்சைகளை நடத்துவதில், CDS ஒரு பங்குபற்றுநரை அல்லது விண்ணப்பதாரியை தகவல் வழங்குமாறும், ஏடுகள், பதிவேடுகளை வழங்குமாறும் மற்றும் CDS இன் அபிப்பிராயத்தில் பங்குபற்றுநரின் அல்லது விண்ணப்பதாரியின் நிதிப்பொறுப்பு மற்றும் தொழிற்பாட்டு ஆற்றலை எடுத்துக்காட்டும் வகையிலமைந்த சத்தியப் பிரமாணம் செய்த அல்லது செய்யாத சான்றுரைகளை வழங்குமாறும் கேட்கலாம்.

14.2 பங்குபற்றுநராக அனுமதிக்கப்பட்டவுடன் ஒவ்வொரு பங்குபற்றுநரும் CDS க்கு ஒவ்வொரு காலாண்டு முடிவிலிருந்து இருபது(20) நாட்களுக்குள் காலண்டு நிதிக் கூற்றுக்களையும், நிதியாண்டின் முடிவிலிருந்து ஆறு(06) மாத காலத்தினுள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். உரிய தேதியில் அல்லது அதற்கு முன்னராக, அத்தகைய கூற்றுக்களைச் சமர்ப்பிக்கத் தவறுதல் அவ்வாறு சமர்ப்பிக்கும்வரை CDS பங்குபற்றுநரை இடைநிறுத்தம் செய்யும் நிலைக்கு இட்டுச்செல்லலாம்.

14.3 CDS பணிப்பாளர்கள் சபை பங்குபற்றுநர் நிதிரீதியாக ஸ்திரநிலையற்றவராகக் காணப்பட்டால் அவர் CDS வழங்கும் சேவைகள் மற்றும் வசதிகளையும் பயன்படுத்தாமல் இடைநிறுத்தம் செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது.

14.4 பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட தொடர்ச்சியான காலப்பகுதிக்கு பங்குபற்றுநர் CDS உடன் தொடர்ச்சியாக வியாபாரத் தொழிலில் ஈடுபடாவிட்டால், அது அவரின் பங்குபற்றுநர் அந்தஸ்தை நீக்கலாம்.

**பிரிவு : 15**

**சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான மட்டுப்பாடுகள்**

CDS பணிப்பாளர்கள் சபை அல்லது பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட குழு பின்வரும் விடயங்கள் ஏதாவது இடம்பெற்றால் ஒரு பங்குபற்றுநரை இடைநிறுத்தவோ அத்தகைய பங்குபற்றுநர் CDS சேவைகளைப் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்யவோ முடியும்.

அ) அத்தகைய பங்குபற்றுநர் ஏதாவது பிரமாணப்படுத்தல் அல்லது சுய-பிரமாணப்படுத்தல் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் அல்லது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார், அல்லது

ஆ) அத்தகைய பங்குபற்றுநர் CDSக்கு நிதிகள் அல்லது பிணையங்கள் விநியோகப்பதிலிருந்து தவணை தவறியுள்ளார்,

இ) CDS தனது தற்றுணிபின்பேரில் பங்குபற்றுநர் நிதி அல்லது செயற்பாட்டு தொழிற்பாட்டு இன்னல்களை எதிர்நோக்கியுள்ளார் எனக் கருதும்போது அல்லது CDS, பங்குபற்றுநர், கடன்கொடுத்தோர் அல்லது முதலீட்டாளர்களையும் பாதுகாப்பதற்கு அத்தகைய நடவடிக்கைகள் அவசியமென்று கருதும்போது.

பிரிவு : 16

## 16.1 ஒழுக்காற்று நடவடிக்கைகள்

அ) CDS விதிகள் மற்றும் நடவடிக்கை முறைகள் என்பவற்றின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியமைக்காக, CDS உடனான பங்குபற்றுநர் உடன்படிக்கைகளை மீறியமைக்காக அல்லது ஏதாவது தவறு, தாமதம் அல்லது CDS இன் தொழிற்பாடுகளுக்குத் தீங்கு விளைவிக்கும்போது ஏதாவது நடத்தைக்காக CDS எவராவது பங்குபற்றுநரை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தலாம் அல்லது CDS உடன் அத்தகைய பங்குபற்றுநர் நடத்தும் வியாபாரத் தொழிலுக்குப் போதுமான வசதிகளை வழங்காமைக்காக வெளியேற்றல், இடைநிறுத்தல், நடவடிக்கைகள், கருமங்கள், செயற்பாடுகளை மட்டுப்படுத்துதல், தண்டம் விதித்தல் அல்லது அவசியமான காலங்களில் ஏதாவது செயலைக் கடிந்துகொள்ளுதல் போன்றவற்றில் CDS ஈடுபடலாம். எவ்வாறியினும், ஒரு தனித் தவறுக்கான தண்டப்பணம் ரூ. 5,000,000/= தொகைக்கு மேற்படுதலாகாது.

ஆ) இந்த விதியின் பிரகாரம் பங்குபற்றுநர் ஒருவர் மீது ஒழங்காற்றுத் தடைகள் ஏற்படுத்துவதற்கு முன்னராக, CDS பங்குபற்றுநருக்கெதிரான குற்றச் சாட்டுக்களை அவருக்குத் தெரிவித்து, செவிமடுக்கப்படுதவற்கான அவரின் உரிமை குறித்தும் அறிவித்தல் வேண்டும். பங்குபற்றுநர் அத்தகைய தீர்மானத்தினால் இடருற்றிருந்தால் அவருக்கு 1987ஆன் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 46ஆம் பிரிவின் கீழ் குறித்த தீர்மானம் அறிவிக்கப்பட்டு 14 தினங்களுள் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை இருத்தல் வேண்டும்.

## 16.2 விதிகளின் மீறல் அல்லது விதிகளோடு இணங்கியொழுகாமைக்கான தண்டப் பணங்கள்

நிரற்படுத்தப்பட்ட உருவகங்களினால் இந்த விதிகளின் மீறுதல் அல்லது அவற்றுடன் இணங்கியொழுகாமைக்காக CDS தண்டப்பணங்களை விதிக்கலாம். அத்தகைய தண்டப் பணங்களின் தொகை காலத்துக்குக் காலம் CDS பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்படலாம்.

**பிரிவு : 17**

**திருத்தப்பட்டவாறான SEC சட்டத்தின் 23ஆம் பிரிவின் நியதிகளின்படி SEC யிடமிருந்து CSE க்குக் கிடைக்கும் பணிப்புரையின் விளைவாக பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை குறித்த விதிகள்**

17.1 திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க SEC சட்டத்தின் 23ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒரு பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநர் வேறொரு பங்கு தரகர்/பங்கு முகவர் பங்குபற்றுநரிடமிருந்து பிணையங்கள் குறித்த கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான எஞ்சியுள்ள ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்குமாறு CSE ஆனது SEC யினால் பணிக்கப்பட்டால், CSE பணிப்புரை விடுக்கும்போது CDS பின்வரும் நடவடிக்கை முறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

17.2 CDS பங்குத் தரகர்/பங்கு முகவர் பங்குபற்றுநர் கொடுத்துத் தீர்த்தல் தவறியமை குறித்தும், SEC யினால் விடுக்கப்பட்ட பணிப்புரை குறித்தும், அத்தகைய பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநர் மூலம் CDS இல் தமது பிணையங்களைப் பேணிவரும் கணக்கு வைத்திருப்போர் எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் செய்திப் பத்திரிகைகளில் 03 மொழிகளிலும் ஓர் அறிவித்தலை வெளியிடுதல் வேண்டும்.

17.3 தவணை தவறிய பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநருடன் பிணையங்களை வைத்திருக்கும் கணக்கு வைத்திருப்போருக்கு அத்தகைய பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநரிடமிருந்து தமது பிணையங்களைத் தாம் தெரிவு செய்யும் எவராவது வேறொரு பங்குத் தரகர்/பங்கு முகவர்ப் பங்குபற்றுநருக்கு மாற்றம் செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்படும். இது மேலே விதி 2இல் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் வெளியாகியதிலிருந்து 30 சந்தை நாட்களுக்குள் இடம்பெறுதல் வேண்டும். ஆயினும் பாராதீனங்கள் மற்றும் இயைபுள்ள பிணையங்கள் சம்பந்தமாக பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநருக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் எதுவும் இருத்தல் ஆகாது.

17.4 கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களில் பாராதீனங்கள் அல்லது கொடுப்பனவுகள் செய்யப்படாத நிலையிருப்பின், கணக்கு வைத்திருப்பவர் பிணையங்களை வேறொரு பங்குபற்றுநருக்கு மாற்ற முடிவது இத்தகைய கடப்பாடுகள் உரிய முறையில் நிறைவேற்றப்படும் போது மாத்திரமேயாகும். எவ்வாறாயினும், இது நீதிமன்றம் விதிக்கும் ஏதாவது மட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட ஒரு விடயமாகும்.

17.5 கணக்கு வைத்திருப்போர் அறிவித்தல் இடம்பெற்றும் 30 சந்தை நாட்களுள் வேறிடத்துக்கு மாற்றாத பிணையங்களின் தகவல்களை CDS குறித்த பங்குத் தரகு/ பங்கு முகவர் பங்குபற்றுநருக்கு அறிவித்து, அத்தகைய பிணையங்கள் இடமாற்றம் செய்யப்பட முடியுமா என்பது குறித்து 7 சந்தை நாட்களினுள் அறிவிக்குமாறும், முடியாவிட்டால் அதன் காரணங்கள் குறித்தும், பிணையங்கள் ஏதாவது பாராதீனங்களுக்கு உட்பட்டிருக்கின்றனவா என்பது குறித்தும் அறிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கும். இந்த வேண்டுகோளின் பின்னர் 07 தினங்களுள் எதுவித தகவல்களும் கிடைக்காதவிடத்து, பிணையங்களை இடமாற்றம் செய்யலாமென்றும், அவை சம்பந்தமான பாராதீனங்கள் எவையும் இல்லையென்றும் ஊகிக்கப்படும் செய்யப்படும். எவ்வாறாயினும் இது நீதிமன்றக் கட்டளையொன்றுக்குக் கீழ்ப்பட்ட விடயமாகும்.

17.6 பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநர் வழங்கும் தகவல்களினடிப்படையில், CDS பங்குத் தரகர் / பங்கு முகவர் பங்குபற்றுநரின் கூற்றின் பிரகாரம் அல்லது விதி 5இன் பிரகாரம் அவ்வாறு கருதப்படும் பாராதீனமற்ற பிணையங்கள் சம்பந்தமாகப் பின்வரும் நடவடிக்கைகளுள் ஒன்றை மேற்கொள்ளலாம்.

i) பின்வரும் முறையில் அத்தகைய பிணையங்கள் வேறொரு பங்குபற்றுநருக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை ஆரம்பித்தல்

அ) தவணை தவறிய பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநரின் பிணையங்கள் கணக்குகளைப் பொறுப்பேற்கும் ஆர்வமுள்ள பங்குபற்றுநர்களை அத்தகைய ஆர்வம் குறித்து CDS க்கு அறிவிக்குமாறு வேண்டிக்கொள்ளலாம். இது சம்பந்தமான நிபந்தனை எதுவும் இடம்பெறமாட்டாது.

ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட பங்குபற்றுநர்கள் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டினால், CDS எந்த அடிப்படையில் குறித்த பிணையங்கள் கணக்குகளை அவர்கள் மத்தியில் விநியோகிப்பது சம்பந்தமாக முடிவெடுக்கும்.

ii) தவணை தவறிய பங்குத் தரகர் / பங்கு முகவர் பங்குபற்றுநரின் பிணையங்கள் கணக்குகளைப் பொறுப்பேற்க வேறெந்தப் பங்குபற்றுநரும் ஆர்வம் காட்டாதவிடத்து, CDS :

அ) அத்தகைய கணக்குகளை இடை நிறுத்தம் செய்தல் வேண்டும், அல்லது

ஆ) இயைபான நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளுடன் முறையே கணக்கு வைத்திருப்போரின் பெயர்களில், பங்குத் தரகரிடம் / பங்கு முகவர் பங்குபற்றுநரிடம் வைப்புச் செய்துள்ள அவர்களின் வைத்திருப்புகளுக்கமைவாக பிணையங்கள் சான்றிதழ்களை வழங்குமாறு ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

17.7 விதி 5இன் நியதிகளின்படி பிணையங்கள் பாராதீனப்படுத்தலுக்கு ஆட்பட்டுள்ளனவென்று பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநர் தெரிவிக்கும்பட்சத்தில், அவை CDS இனால் இடைநிறுத்தப்படும்.

17.8 செய்ய வேண்டிய கொடுப்பனவுகளுக்கும், பாராதீனங்களுக்கும் பின்னர் தீர்வுகாணும் கணக்கு வைத்திருப்போர் அவ்வாறு இடம்பெற்றதாகக் குறித்த பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநரிடமிருந்து சான்றிதழொன்றைப் பெற்றுக்கொண்டு, பிணையங்களை வேறொரு பங்குபற்றுநருக்கு இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

17.9 மேற்கூறிய நடவடிக்கைமுறைகளின் பிரயோகத்தை அடுத்து இடைநிறுத்தப்பட்ட எஞ்சிய பிணையங்கள் SEC யின் அங்கீகாரத்துடன் வேறு எவரேனும் திறத்தவருக்கு மாற்றம் செய்யப்படலாம்.

பிரிவு : 18

## கடன் பிணையங்கள் தொடர்பான விதிகள்

### 18.1 வரைவிலக்கணங்கள்

**கூட்டுக் கடன் பிணையங்கள்**

கூட்டு கடன் பிணையங்கள் என்பது உருவகம் ஒன்றினால் வழங்கப்படும் பிணையங்கள் எனப் பொருள்படும்.

**கடன் பிணையங்கள்**

கடன் பிணையங்கள் என்பது அரசாங்கப் பிணையங்களும், கூட்டு கடன் பிணையங்களும் எனப் பொருள்படும்.

**அரசாங்கப் பிணையங்கள்**

- அரசாங்கப் பிணையங்கள் என்பது (திருத்தப்பட்டவாறான) 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் எனவும்,

- (திருத்தப்பட்டவாறான) 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் எனவும்,

- (திருத்தப்பட்டவாறான) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதாவது பிணையம் எனவும்,

பொருள்படும்.

**பங்குபற்றுநர்**

பங்குபற்றுநர் என்பது கடன் பிணையங்களில் வியாபாரம் செய்வதற்கு CSE யின் அனுமதி பெற்ற (ஏற்புடையற்பாலதான) ஒரு பங்குத் தரகர் /பங்கு முகவர் பங்குபற்றுநர் எனப் பொருள்படும்.

**கொடுத்துத் தீர்த்தல் தேதி**

கொடுத்துத் தீர்த்தல் தேதி என்பது,

- Tom Board இல் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் கடன் பிணையங்கள் விடயத்தில் வியாபார நாளிற்கு பின்னர் வரும் முதலாவது சந்தை நாள் (T+1) என்பதாகும்.

- Spot Board இல் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் கடன் பிணையங்கள் வர்த்தகத் தினத்திற்குப் பின்னர் வரும் இரண்டாவது வியாபார நாளிற்கு (T+2) என்பதாகும்.

**Spot Board**

Spot Board என்பது கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுத்துத் தீர்க்கும் தேதி வியாபார நாளிற்குப் பின்னர் இரண்டாவது சந்தை நாள் (T+2) ஆகும் வகையில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்படும் வியாபாரப் பலகையாகும்.

**Tom Board**

Tom Board என்பது கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுத்துத் தீர்க்கும் வியாபார நாளிற்குப் பின்னர் வரும் முதலாவது சந்தை நாள் (T+1) ஆகும் வகையில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்படும் வியாபாரப் பலகை என்பதாகும்.

### 18.2 கடன் பிணையங்கள் சம்பந்தமான குறிப்பீடு

இந்த விதிகளில், வியாபாரம் செய்வதற்கு, அனுமதிப்பதற்கு மற்றும் கொடுத்துத் தீர்ப்பதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் குறிப்பீடு, சந்தர்ப்பம் அவ்வாறு அவசியப்படுத்தினாலன்றி, அத்தகைய கடன் பிணையங்களின் நன்மை பயக்கும் அக்கறையின் வியாபாரம் அனுமதித்தல், கொடுத்துத்தீர்த்தல் என்பவற்றின் உட்கிடையானதாதல் வேண்டும்.

### 18.3 கடன் பிணையங்களைக் கொடுத்துத் தீர்த்தல்

CSE யின் தன்னியக்க வியாபார முறைமையினூடாக இடம்பெறும் வியாபாரத்தினைப் பின்பற்றி வாங்குபவரின் வாடிக்கையாளர் கணக்கில் கடன் பிணையங்களை வரவு வைத்தல், பெயர் குறிப்பிட்ட கொடுத்துத் தீர்த்தல் வங்கியிலிருந்து நிதிகளின் கொடுத்துத் தீர்த்தல் உறுதிப்படுத்தல் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டதன் மேல் மட்டும் இடம்பெறுதல் வேண்டும்.

### 18.4 பங்குபற்றுநர்களுக்கு இடையேயான கொடுத்துத் தீர்த்தல்

அ) CSE யில் வியாபாரம் செய்யப்படும் கடன் பிணையங்களுக்கான நிதிகளை பங்குபற்றுநர்களிடையே கொடுத்துத் தீர்த்தலானது, தீர்வுத்தேதியில் 10.30 மணியளவில், CDS வழங்கும் கொடுத்துத் தீர்த்தல் அட்டவணையின் பிரகாரம் கொடுத்துத் தீர்த்தல் வங்கிகளினூடாக இடம்பெறும்.

ஆ) CDS இந்த விதிகளுக்கு அமைய செலுத்த வேண்டிய மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டிய தொகைக்கு தனது கணக்கில் அல்லது பங்குபற்றுநர் கணக்கில் பற்று அல்லது வரவு வைத்துக்கொள்ளும்.

இ) ஒவ்வொரு சந்தை நாளிலும் CDS ஒரு கொடுத்துத் தீர்த்தல் அட்டவணையை வழங்கும். இது பங்குபற்றுநரின் கணக்கில் பதியப்பட்ட பற்றுக்கள் மற்றும் வரவுகளையும், ஒரு குறிப்பிடப்பட்ட கொடுத்துத் தீர்த்தல் தேதியில் ஒவ்வொரு பங்குபற்றுநரும் கொடுத்துத் தீர்க்க வேண்டிய தேறிய தொகையையும் பிரதிபலிக்கும்.

ஈ) வாங்குபவர் கொடுத்துத் தீர்த்தல் தேதியில் 09.00 மணியளவில் வாங்கும் பங்குத் தரகர் பங்குபற்றுநருக்கு/நம்பிக்கைப்பொறுப்பு வங்கிக்கு பிணையங்கள் கொள்முதலுக்கு சிக்கலற்ற நிதிகள் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

உ) பங்குத் தரகர் பங்குபற்றுநரின் கொடுத்துத் தீர்த்தல் தேதியன்று 09.30மணியளவில் பிணையங்கள் கொள்முதலுக்கு CDS வழங்கும் கொடுத்துத் தீர்த்தல் அட்டவணையினடிப்படையில் அத்தகைய பங்குபற்றுநர் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்யும் வகையில் கொடுத்துத்தீர்த்தல் வங்கிக் கணக்கில் சிக்கலற்ற நிதிகள் கிட்டுவதை உறுதி செய்தல் வேண்டும்.

ஊ) CDS இனால் வழங்கப்படும் கொடுத்துத்தீர்த்தல் அட்டவணையினடிப்படையில் நம்பிக்கைப்பொறுப்பு வங்கி மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்குத் கொடுத்துத் தீர்த்தல் தேதியில் கொடுப்பனவுகள் செய்வதற்குப் போதுமான சிக்கலற்ற நிதிகள் கிடைப்பதை நம்பிக்கைப்பொறுப்பு வங்கிகள் உறுதி செய்தல் வேண்டும்.

இந்த விதிகள் நோக்கங்களுக்கமைய "சிக்கலற்ற நிதிகள்" என்பதன் கருத்து தீர்க்கப்பட்டவையும்,முறையே கொடுத்துத் தீர்த்தல் வங்கியிலிருந்து பெறக்கூடியவையுமான நிதிகள் என்பதாகும்.

**18.5 கடன் பிணையங்களில் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏற்புடையற்பாலதான எல்லை நிபந்தனைத் தேவைப்பாடுகள்**

அ) ஒவ்வொரு பங்குபற்றுநர் விடயத்திலும் Spot Board இல் நிறைவேற்றப்படும் வர்த்தகங்களின் விளைவாக, எல்லை நிபந்தனைத் தேவைப்பாடுகள் CDS இனால் கணிப்பிடப்படும். இது பங்குபற்றுநரிடையே இடம்பெறும் கொடுத்துத் தீர்த்தலைப் பொறுத்து, அவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் கொடுத்துத்தீர்த்தல் இடர்வரைவைக் கருத்திற்கொண்டு செய்யப்படுவதாகும். இத்தகைய ஒரு எல்லை நிபந்தனைத் தேவைப்பாடு CDS இனால் வியாபார நாள் முடிவில் (T) பங்குபற்றுநருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

ஆ) ஒரு எல்லை நிபந்தனைத் தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் முறையியலின் பிரகாரம் கணிப்பீடு செய்யப்படும்.

இ) ஒரு சந்தை நாளில் Spot Board இல் ஒரு பங்குபற்றுநராய் நிறைவேற்றப்படும் கொள்முதல்களின் கூட்டு மொத்தப் பெறுமதி பத்து (10) மில்லியன் ரூபாவுக்கு

அதிகமாகச் சமமாகையில் அல்லது அதற்கு அதிகமாகவிருக்கையில் அத்தகைய பங்குபற்றுநருக்கு எல்லை நிபந்தனைத் தேவைப்பாடு ஏற்புடையதாதல் வேண்டும்.

ஈ) Tom Board இல் நிறைவேற்றப்படும் வியாபார நடவடிக்கைகளுக்கு எல்லை நிபந்தனைத் தேவைப்பாடு கணிப்பிடப்படமாட்டாது.

**18.6 CDS க்கு ஈட்டுத்தரவாதம் வழங்குதல்**

அ) மேலே 18.5 (இ) யில் எடுத்துரைக்கப்பட்ட எல்லை நிபந்தனைத் தேவைப்பாடு பிரயோகமாகும் பட்சத்தில், பங்குபற்றுநர் CDS க்கு T+1 நாளின் 09.30 மணியளவில் ஈட்டுத்தரவாதத்தை வழங்குதல் வேண்டும். CDS க்கு வழங்கப்படும் ஈட்டுத்தரவாதத்தின் பெறுமதி, குறைந்தது மேலே விதி 18.5 இன் பிரகாரம் கணிக்கப்படும். அத்தகைய பங்குபற்றுநர் எல்லை நிபந்தனைத் தேவைப்பாட்டுக்குச் சமமானதாகவிருத்தல் வேண்டும்.

ஆ) CDS க்கு வழங்கப்படும் ஈட்டுத்தரவாதம் காசு வைப்பு வடிவத்தில் மற்றும் / அல்லது முடக்கப்பட்ட கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் வடித்தில் இருத்தல் வேண்டும்.

இவ்விதியின் நோக்கங்களுக்காக “முடிக்கப்பட்ட கணக்கு” என்பது எந்த CDSஇல் வியாபாரம் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றதோ அந்த CDS இல் பேணப்படும் பங்குபற்றுநரின் பெயர்குறித்த கணக்கு எனப் பொருள்படும்.

இ) ஈட்டுத்தரவாதம் CDS இனால் பின்வரும் விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படும்

i) தவணை தவறும் பங்குபற்றுநரினால் அவரின் வாடிக்கையாளர் எவருக்கும் செலுத்தப்பட வேண்டிய ஏதாவது தொகைகள் அத்துடன்/அல்லது

ii) தவணை தவறும் பங்குபற்றுநரினால் CDS இன் வேறு எவராவது பங்குபற்றுநருக்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதாவது தொகைகள் அத்துடன்/அல்லது

iii) அத்தகைய பங்குபற்றுநரால் CDS,CSE மற்றும் SEC என்பனவற்றுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதாவது கட்டணங்கள், தரகுக் கூலிகள், விதிப்பனவுகள் என்பவற்றைச் செலுத்தும் வகையில்

ஈ) மேலே 18.6 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்கப் பிணையங்களில் வியாபாரம் இடம்பெறுதல் ஆகாது. இத்தகைய அரசாங்கப் பிணையங்கள் ஒவ்வொரு சந்தைத் நாளின் முடிவிலும், முடக்கப்பட்ட கணக்கிலிருந்து இடமாற்றங்கள் செய்யப்படும்போதும் சந்தைக்குக் குறியிடப்படும் அரசாங்கப் பிணையங்களின் சந்தைக்குக் குறியீடு செய்யும் பெறுமதி, முடக்கப்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப்படும் அரசாங்கப் பிணையங்களின் பெறுமதியைத் தீர்மானிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படும்.

உ) முடக்கப்பட்ட கணக்கிலிருந்து CDS இல் பங்குபற்றுநரின் வர்த்தகக் கணக்கிற்கு அரசாங்கப் பிணையங்களின் இடமாற்றம், அத்தகைய பங்குபற்றுநரால் வழங்கப்படும் காசு வைப்பு மற்றும் / அல்லது அரசாங்கப் பிணையங்களின் பெறுமதி காலத்துக்குக் காலம் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் நிபந்தனை மட்டத்துக்கு அதிகமாகவிருக்கும் போது அனுமதிக்கப்படும்.

ஊ) ஒரு பங்குபற்றுநர் எல்லை நிபந்தனைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் ஈட்டுத்தரவாதத்தை வழங்கத் தவறும் பட்சத்தில், அத்தகைய பங்குபற்றுநர் கடன் பிணையங்களில் வியாபாரம் செய்வது இடைநிறுத்தம் செய்யப்படும்.

**18.7 ஒரு நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினூடாக இடம்பெறும் வியாபாரங்களின் கொடுத்துத் தீர்த்தல்**

ஒரு நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினூடாகப் பதிவு பெற்ற கணக்கு வைத்திருப்பவர் சார்பில் இடம்பெறும் கடன் பிணையங்கள் வியாபாரம் இயைபுள்ள நம்பிக்கைப்பொறுப்பு வங்கியினால் கொடுத்துத் தீர்க்கப்படாவிடில், அத்தகைய வியாபாரத்தில் கொடுத்துத் தீர்த்தல் சம்பந்தமான பொறுப்பு வியாபாரத்தை நிறைவேற்றிய பங்குத் தரகர் பங்குபற்றுநருடையதாகும்.

**18.8 கூட்டு கடன் பிணையங்கள் மீதான வட்டியும், முதிர்ச்சிப் பயன் தொகைகளும்**

(அ) CDSஆனது உரித்துடைமைத் தேதியில் உள்ளவாறான கூட்டுகடன் பிணைங்கள் தொடர்பாக தமது அந்தந்த வைத்திருக்கைகளுடன் கணக்கு வைத்திருப்பவர்களின் நிரல் ஒன்றை உருவகத்தின் கம்பனிச் செயலாளருக்கு கொடுத்துதவுதல் வேண்டும்.

(ஆ) வட்டியும் முதிர்ச்சிக்கால வருமானங்களும் CDSஇனால் வழங்கப்பட்ட தகவலின்படி கணக்கு வைத்திருப்பவருக்கு நேரடியாகச் செய்யப்படல் வேண்டும்.

**18.9 அரசாங்கபிணையங்கள் மீதானவட்டியும் முதிர்ச்சிக்காலவருமானங்களும்.**

அ) அரசாங்கப் பிணையங்களின் வட்டி மற்றும் முதிர்ச்சிப் பயன்தொகைகளைக் கொடுப்பனவு செய்தல் பங்குபற்றுநருக்கு CDS மூலமாக இடம்பெறுதல் வேண்டும்.

ஆ) CDS அரசாங்கப் பிணையங்களில் வட்டி/முதிர்ச்சிப் பயன்தொகைகளைப் பெறுவதற்கு உரித்துள்ள கணக்கு வைத்திருப்போரின் நிரலொன்றை அத்தகைய பங்குபற்றுநருக்கு வழங்குதல் வேண்டும்.

இ) தாம் பெற்றுக் கொள்ளும் வட்டி/முதிர்ச்சிப் பயன்தொகை CDS வழங்கும் தகவல்களின் பிரகாரம் கணக்கு வைத்திருப்போருக்கு உரிய முறையில் செலுத்தப்படுவதைப் பங்குபற்றுநர் உறுதி செய்தல் வேண்டும்.

ஈ) வட்டி/முதிர்ச்சிப் பயன் தொகைகள் செலுத்தப்படவேண்டிய உரிய தேதி, சந்தை நாளல்லாத ஒரு நாள் ஆயின், அத்தகைய வட்டி/ முதிர்ச்சிப் பயன் தொகைகள் இலங்கை மத்திய வங்கி நடைமுறைகளின் பிரகாரம் பங்குபற்றுநருக்கு CDS இனால் வழங்கப்படுதல் வேண்டும்.

**18.10 அரசாங்கப் பிணையங்களின் வைப்புக்கள்**

அ) கணக்கு வைத்திருப்பவர்கள் ஒரு பங்குபற்றுநரூடாக, தாம் வைத்திருக்கும் அரசாங்கப் பிணையங்களின் உரித்தை CDS க்கு மாற்றம் செய்யலாம். இத்தகைய மாற்றம் இடம்பெறும்போது, அரசாங்கப் பிணையங்கள் CDS இனால் இயைபுள்ள வாடிக்கையாளர் கணக்கில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

ஆ) இத்தகைய அரசாங்கப் பிணையங்களின் அனுகூல நலன்களில் ஏதாவது எதிர்கால வர்த்தகங்களை மனதிற்கொண்டு, கணக்கு வைத்திருப்பவரினால் அனுகூல நலன் தக்க வைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இ) CDS உடன் அரசாங்கப் பிணையங்களின் செல்லுபடியற்ற வைப்புக் காரணமாக எழும் சகல பொறுப்புகளையும் பங்குபற்றுநர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**பிரிவு 19**

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் தன்னியக்கமாக்கப்பட்ட வியாபார முறைமையின்மீது எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதிகளாக நிறைவேற்றப்பட்ட வியாபாரங்களைத் தீர்வுசெய்வதற்கும் தீர்த்துவைப்பதற்குமான மேலதிக விதிகள்

19.1 எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதியொன்றை நிறைவேற்றியமையை அடுத்துப்பின்னர் வாங்குனரின்/வாங்குனர்களின் கணக்குக்குப் பங்குகளைக் கைமாற்றுதல்.

1. எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதியொன்றை நிறைவேற்றியதன்மேல், வியாபாரத்தின் தீர்த்துவைத்தல் முடிவுறும்வரை, வியாபார நாளன்று (T) மத்திய வைப்பக முறைமையிலுள்ள வாங்குனரின்/ வாங்குனர்களின் கணக்கின் அடைக்கப்பட்ட மீதிக்குப் பங்குகள் கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய பங்குகள், T+3 இன்மீதான கொடுக்கல்வாங்கல் கொடுத்துத்தீர்க்கப்படுவதனை அடுத்துப்பின்னர் வாங்குனரின்/ வாங்குனர்களின் அடைக்கப்பட்ட மீதியிலிருந்து அத்தகைய வாங்குனரின்/ வாங்குனர்களின் வியாபார மீதிக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

2. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் (CSE) கலந்தாலோசனையுடன், தீர்த்துவைத்தல் தவறப்பட்டுள்ளதென மத்திய வைப்பக முறைமை (CDS) கருதும் பட்சத்தில், அது, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (SEC) அங்கீகாரத்துக்கமைய, வாங்குனரின்/ வாங்குனர்களின் அடைக்கப்பட்ட மீதியிலிருந்து மத்திய வைப்பக முறைமையிலுள்ள (CDS) விற்பனையாளரின்/விற்பனையாளர்களின் கணக்குக்குப் பங்குகளைக் கைமாற்றுதல் வேண்டும்.

19.2 முதலீட்டாளர்களின் கூட்டமைப்பொன்றினால் நிறைவேற்றப்பட்ட வியாபாரங்களுக்கான பெயர் குறிக்கப்பட்ட கணக்கு

முதலீட்டாளர்களின் கூட்டமைப்பொன்றினால் எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) கொடுக்கல்வாங்கல்கள் நிறைவேற்றப்படும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்குப் பங்குபற்றுனரொருவர் விசேட மத்திய வைப்பக முறைமைக் கணக்கொன்றை (CDS) திறத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டமைப்பு பத்து (10) முதலீட்டாளர்களை மிஞ்சுதலுமாகாது.

அத்தகைய விசேட மத்திய வைப்பக முறைமைக் கணக்கு (CDS) காப்பாளர் வங்கியொன்றினூடாகத் திறக்கப்படும் பட்சத்தில், விசேட மத்திய வைப்பக முறைமை (CDS) கணக்கைத் திறக்கும் நேரத்தில், அத்தகைய காப்பாளர் வங்கி, அத்தகைய விசேட மத்திய வைப்பக முறைமை (CDS) கணக்கிலிருந்து எழுகின்ற எல்லாத் தீர்த்துவைத்தல் கடப்பாடுகளையும் அது தீர்த்துவைக்குமெனக் காலத்துக்குக்காலம் மத்திய வைப்பக முறைமையினால் (CDS) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பொறுப்பேற்பொன்றை வழங்குதல் வேண்டும்.

19.3 ஒரு கூட்டமைப்பாகப் பங்குகளை விற்பதற்கான வசதியானது, இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட உருவகங்களுக்கு/ முகவராண்மைகளுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும். கூட்டமைப்பாகப் பங்குகளை வாங்குவதற்கான வசதி, எல்லா முதலீட்டாளர்களுக்கும் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும்.

19.4 எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி வசதியைப் பயன்படுத்தி முதலீட்டாளர்களின் கூட்டமைப்பொன்றினால் நிறைவேற்றப்பட்ட வியாபாரங்கள் தொடர்பான பங்குக் கைமாற்றல்கள்

1. தன்னியக்கமாக்கப்பட்ட வியாபார முறைமை (ATS) விதிகளில் தரப்பட்டுள்ளவாறு எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதியொன்று தொடர்பாக ஒரு பங்குபற்றுனரினூடாகத் திறக்கப்பட்ட விசேட மத்திய வைப்பக முறைமையொன்றை (CDS) பயன்படுத்தி முதலீட்டாளர்களின் கூட்டமைப்பு, கொள்வனவு கட்டளையொன்றை இடுகின்ற பட்சத்தில் மற்றும் எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி அத்தகைய விசேட மத்திய வைப்பக (CDS) கணக்கினூடாகக் கொள்வனவு செய்யப்படும் பட்சத்தில், மத்திய வைப்பக முறைமை (CDS) மேலே விதி 19.1 இன் நியதிகளின்படி அத்தகைய பங்குகளைக் கைமாற்றுதல் வேண்டும்.
2. இலங்கை அரசாங்கம் பன்மடி உருவகங்களின்.∵முகவராண்மைகளின் ஊடாக ஒரு நிரற்படுத்தப்பட்ட உருவகத்தின் பங்குகளை வைத்திருந்து, ஒரு பங்குபற்றுனரினூடாகத் தன்னியக்கமாக்கப்பட்ட வியாபார முறைமையின்மீது (ATS) எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி வசதியைப் பயன்படுத்தி ஒரு கூட்டமைப்பாகத் தனியொரு விற்பனைக்கட்டளையைச் சமர்ப்பிக்க விரும்புகின்ற சந்தர்ப்பங்களில், அத்தகைய

உருவகங்களினால்/முகவராண்மைகளினால் அவற்றின் முறையான மத்திய வைப்பக முறைமை (CDS) கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட பங்குகள், இந்நோக்கத்துக்காகப் பங்குபற்றுனரினால் திறக்கப்பட்ட விசேட மத்திய வைப்பக முறைமை (CDS) கணக்குக்கு முதலில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

19.5 நிதிகளின் தீர்த்துவைத்தலை வசதிப்படுத்துதல்

1. வியாபாரங்கள் நிறைவுசெய்யப்படுவதன்மேல், மத்திய வைப்பக முறைமை (CDS) வாங்குனரின்/ வாங்குனர்களின் பங்குபற்றுனருக்கு, எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி வசதியைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட வியாபாரங்களை உள்ளடக்குகின்ற தீர்த்துவைத்தல் அட்டவணைகளை வழங்குதல் வேண்டும். அத்தகைய பங்குபற்றுனர், இவ்விதிகளின் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி நிதிகளைத் தீர்த்துவைப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.
2. ஒரு விசேட மத்திய வைப்பக முறைமை (CDS) கணக்கினூடாகத் தொழிற்படுகின்ற முதலீட்டாளர்களின் கூட்டமைப்பொன்றினால் எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி கொள்வனவுசெய்யப்படும் பட்சத்தில், எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) கொடுக்கல்வாங்கலுக்கான தீர்த்துவைத்தல் கடப்பாடுகள், எந்தப் பங்குபற்றுனரினூடாக விசேட மத்திய வைப்பக முறைமைக் கணக்கு (CDS) திறக்கப்பட்டதோ அந்தப் பங்குபற்றுனரினால் பொறுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விசேட மத்திய வைப்பக முறைமை (CDS) கணக்கு எந்த முதலீட்டாளர்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டதோ அந்தந்த முதலீட்டாளர்களை, தீர்த்துவைத்தல் தேதியன்று இயைபான கொடுக்கல்வாங்கலைத் தீர்த்துவைப்பதற்குத் தீர்வுசெய்யப்பட்ட நிதிகள் கிடைக்கக்கூடியதாக்கப்படுவதனை உறுதிப்படுத்தும்படி பங்குபற்றுனர் அறிவுறுத்துதல் வேண்டும்.
3. எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி வசதியைப் பயன்படுத்தி பன்மடி உருவகங்களின்/முகவராண்மைகளின் ஊடாக இலங்கை அரசாங்கத்தினால் வைத்திருக்கப்பட்ட பிணையங்கள் காரணமாக ஒரு விற்பனைக் கொடுக்கல்வாங்கல் நிறைவேற்றப்படும் பட்சத்தில், அத்தகைய கொடுக்கல்வாங்கலின் விற்பனை வரும்படிகள், மேலே விதி 19.4.2 இன் நியதிகளின்படி இயைபான எந்தப் பங்குபற்றுனரினூடாக விசேட மத்திய

வைப்பக முறை (CDS) கணக்கு திறக்கப்பட்டதோ இயைபான அந்தப் பங்குபற்றுனருக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும். இயைபான பங்குபற்றுனர், விற்பனை வரும்படிகள் தீர்த்துவைத்தல் திகதியன்று அந்தந்த உருவகங்களுக்கு/முகவராண்மைகளுக்குக் கைமாற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

19.6 விதிகளை விட்டுக்கொடுத்தல் அத்துடன்/அல்லது மேலதிக நிபந்தனைகளை அறிமுகப்படுத்துதல்

மத்திய வைப்பக முறைமையானது (CDS) பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (SEC) கலந்தாலோசனையுடன், எல்லாம் அல்லது எவையுமில்லை (AON) தொகுதி வசதியினூடாக அரசாங்க அக்கறையொன்றை விற்பதனை வசதிப்படுத்துவதற்கு இவ்விதிகளுள் எவற்றினதும் ஏற்புடைமையை விட்டுக்கொடுக்கலாம் அத்துடன்/அல்லது மேலதிக நிபந்தனைகளை அறிமுகப்படுத்தலாம்.